பக்கங்கள்:-20

# காலை முரசு

முழக்கம்: 02 | வள்ளுவர் ஆண்டு 2055 | கார்த்திகை 03 | திங்கட்கிழமை | 18.11.2024 | அதிர்வு 108

## யாழ். வருகிறார் சீனத் தூதுவர்

இலங்கைக்கான சீனத் தூதுவர், உத்தியோகபூர்வ பயணமாக நாளை யாழ்ப்பாணம் வருகின்றார்.

நாடாளுமன்றத் தேர்தலின் பின்பு முதலாவது இராஜதந்திரியாக 05

### உண்மையான நல்லிணக்கம் ஏற்பட

# அதிகாரப் பகிர்வு மிகவும் அவசியம்

### தேசிய மக்கள் சக்திக்கான வாழ்த்துச் செய்தியில் சுரேஷ் வலியுறுத்து



"எந்தவொரு அரசுக்கும் கொடுக்காத ஆதரவை வரலாற்றில் முதல் தடவையாக வடக்கு, கிழக்கு வாழ் தமிழ் மக்கள் தேசிய மக்கள் சக்திக்குக் கொடுத்துள்ளனர். அதுமாத்திரமல்லாமல் ஒட்டுமொத்த நாட்டு மக்களும் மூன்றில் இரண்டு பெரும்பான்மையையும் வழங்கியுள்ளனர். இந்நிலையில், நாடு எதிர்நோக்கும் பிரச்சினைகளில் முதன்மைப்படுத்தக்கூடிய ஒன்றாக தேசிய இனப்பிரச்சினை இருக்கின்றது என்பதைப் புரிந்து கொண்டு அதிகாரங்களைப் பகிர்ந்துகொள்வதானது இனங்களுக்கிடையில் உண்மையான நல்லிணக்கத்தையும் பரஸ்பர நம்பிக்கையையும் கட்டியெழுப்பும் என்று நாங்கள் நம்புகின்றோம்."

- இவ்வாறு ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் தலைவரும் ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியின் பேச்சாளருமான சுரேஷ் க.பிரேமச்சந்திரன் தெரிவித்துள்ளார். 07

# மனோவுக்குத் தேசியப் பட்டியல் வாய்ப்பு வழங்குமா சஜித் அணி?



"நாடாளுமன்றத் தேர்தலில் தோல்வி அடைந்தவர்களுக்குத் தேசியப் பட்டியல் ஊடாக வாய்ப்பளிப்பது தொடர்பில் இன்னும் தீர்மானம் எடுக்கப்படவில்லை. மனோ கணேசன் உட்பட பலரும் வாய்ப்பு கோரியுள்ளனர். உரிய பரிசீலனையின் பின்னர் தீர்மானம் எடுக்கப்படும்."

– இவ்வாறு ஐக்கிய மக்கள் சக்தியின் பொதுச்செயலாளர் ரஞ்சித் மத்தும பண்டார தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற ஊடக சந்திப்பின்போது எழுப்பப்பட்ட கேள்விக்குப் பதிலளிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார். 05




இலங்கைத் தமிழரசுக் கட்சியின் நேற்றைய அரசியல் குழுக் கூட்டத்தில் தேசிய பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினர் பதவியைக் கட்சியின் பொதுச் செயலாளர் மருத்துவர் சத்தியலிங்கத்துக்கு வழங்குவது என்ற முடிவு எடுக்கப்பட்டதுதான் முக்கிய விவகாரம்.

ஆனால், அந்தக் கூட்டத்தில் பங்கு பற்றிய முக்கிய பிரமுகர் ஒருவர், அந்தக் கூட்டத்தின் முக்கிய விடயம் அதுவல்ல, அந்த எம்.பி. பதவியை எப்படியும் தனக்குத் தாருங்கள் என்று விடாமல் கெஞ்சிக் கூத்தாடிக் கொண்டிருந்த மாவை சேனாதிராஜாவின் பரிதாப நிலைதான் முக்கியமான அம்சம் என்று குறிப்பிட்டார்.

நேற்றுக் கூட்டம் தொடங்கிய போது தமக்கு 2 வருடங்களுக்காவது அந்தப் பதவியை தாருங்கள் என்று கெஞ்சத் தொடங்கினார் மாவை சேனாதிராஜா.

ஒருகட்டத்தில், இப்போதைய அரசியல் நிலைமை கருதி புதிய அரசமைப்பு உருவாக்க விடயங்களை கவனிப்பதற்காக அந்த தேசியப் 05




# தொழில்நுட்ப கோளாறால் சில விமானங்கள் இரத்து

ஸ்ரீலங்கன் விமான நிறுவனத்துக்கு சொந்தமான 3 விமானங்களில் ஏற்பட்டுள்ள தொழில்நுட்ப கோளாறு காரணமாக நேற்று சில விமானங்கள் இரத்து செய்யப்பட்டுள்ளன.

அத்துடன் பல விமானங்கள் இரத்து செய்யப்படலாம் எனவும் தாமதமாகலாம் என்றும் ஸ்ரீலங்கன் விமான சேவையின் பேச்சாளர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

அதற்கமைய, நேற்று மாலை 6.35 இக்கு சென்னை செல்லவிருந்த ஸ்ரீலங்கன் விமானச் சேவைக்கு சொந்தமான யு.எல் 123 என்ற விமானமும், இந்தியாவின் சென்னையிலிருந்து, கட்டுநாயக்க விமான நிலையத்துக்கு புறப்படவிருந்த யு எல் 124 என்ற விமானமும் இரத்து செய்யப்பட்டன.

அத்துடன் புதுடில்லி, அவுஸ்திரேலியாவின் மெல்போர்ன் உள்ளிட்ட நகரங்களிலிருந்து கட்டுநாயக்க விமான நிலையத்திற்கு புறப்படவிருந்த விமானங்களும் இரத்து செய்யப்பட்டுள்ளன என ஸ்ரீலங்கன் விமான சேவையின் பேச்சாளர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

# தேசிய மக்கள் சக்தியின் தேசியப் பட்டியல் விவரம்



தேசிய மக்கள் சக்தியின் தேசியப் பட்டியல் உறுப்பினர்களின் பெயர்கள் வெளியிடப்பட்டுள்ளன.

அதனடிப்படையில்,

1. பிமல் நிரோஷன் ரத்நாயக்க
2. கலாநிதி அனுர கருணாதிலக
3. பேராசிரியர் உபாலி பன்னிலகே
4. எரங்க உதேஷ் வீரரத்ன
5. அருண ஜயசேகர
6. கலாநிதி ஹர்ஷன சூரியபெரும
7. ஜனித ருவன் கொடித்துவக்கு
8. புண்ய ஸ்ரீகுமார ஜயகொடி
9. இராமலிங்கம் சந்திரசேகரன்
10. வைத்தியர் நஜீத் இந்திக
11. சுகத் திலகரத்ன
12. லக்மாலி காஞ்சனா ஹேமச்சந்திர
13. சுனில் குமார கமகே
14. காமினி ரத்நாயக்க
15. பேராசிரியர் ருவன் சமிந்த ரணசிங்க
16. சுகத் வசந்த டி சில்வா
17. அபூபக்கர் ஆதம்பாவா
18. ரத்நாயக்க ஹெட்டியே உபாலி சமரசிங்க



# புதிய அமைச்சரவை இன்று பதவியேற்பு

புதிய அமைச்சரவை இன்று காலை 10 மணிக்கு பதவி யேற்கவுள்ளது.

ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க முன்னிலையில் ஜனாதிபதி செயலகத்தில் இந்த பதவியேற்பு நடைபெறவுள்ளது.

அமைச்சரவை அமைச்சர்கள் மற்றும் பிரதியமைச்சர்க ளும் இதன்போது பதவியேற்கவுள்ளனர் என ஜனாதிபதி ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

10 ஆவது நாடாளுமன்றத்தின் முதலாவது சபை அமர்வு எதிர்வரும் 21ஆம் திகதி காலை 10 மணிக்கு இடம்பெறவுள்ளது.

175 இற்கும் அதிகமான புதிய நாடாளுமன்ற உறுப்பினர் கள் இம்முறை நாடாளுமன்றத்திற்கு தெரிவாகியுள்ளனர்.

இம்முறை தெரிவாகியுள்ள அனைத்து நாடாளுமன்ற உறுப்பினர்களிடமிருந்தும் அவர்களது தகவல்களைப் பெற்றுக் கொள்வதற்கான விசேட கருமபீடமொன்று நாடா ளுமன்றத்தில் நிறுவப்படும் என நாடாளுமன்ற செயலாளர் நாயகம் குஷானி ரோஹணதீர தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் 19 மற்றும் 20ஆம் திகதிகளில் மேற்படி கருமபீடத் தின் ஊடான செயற்பாடுகள் முன்னெடுக்கப்படவுள்ளன.

# உயர்தர மேலதிக வகுப்புகளுக்கு 19 ஆம் திகதி முதல் தடை விதிப்பு




க.பொ.த உயர்தர பரீட்சைக்கான மேலதிக வகுப்புகள் மற்றும் செயலமர்வுகள் எதிர்வரும் 19 ஆம் திகதி நள்ளிர வுக்கு முன்னர் நிறைவு செய்யப்படவேண்டுமென பரீட்சைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இந்த ஆலோசனைகளை பின்பற்றாதவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என பரீட்சைகள் திணைக்க- ளம் எச்சரித்துள்ளது.

இதனிடையே பரீட்சை காலப்பகுதியில் கண்காணிப்பு நடவடிக்கைகள் தீவிரப்படுத்தப்பட்டுள்ளன என பரீட்சைகள் திணைக்களம் குறிப்பிட்டுள்ளது.

கடந்த காலங்களில் பரீட்சைகள் தொடர்பாக ஏற்பட்ட சிக் கல்களை கருத்தில் கொண்டு இந்த நடவடிக்கை எடுக்கப் பட்டுள்ளதாக திணைக்களம் அறிவித்துள்ளது.

பரீட்சை திணைக்கள அதிகாரிகளுக்கு மேலதிகமாக மாகாண மற்றும் பிராந்திய அலுவலகங்களின் அதிகாரிகளும் கண்காணிப்பு நடவடிக்கைகளில் ஈடுபடுத்தப்படவுள்ளனர் என பரீட்சைகள் திணைக்களம் குறிப்பிட்டுள்ளது.

உயர்தர பரீட்சை எதிர்வரும் 25 ஆம் திகதி முதல் டிசம்பர் 20 ஆம் திகதி வரை நடைபெறவுள்ளதுடன், 2,312 பரீட்சை நிலையங்களுடன் 319 தொடர்பாடல் மையங்களும் பரீட்சைக் காக ஸ்தாபிக்கப்படவுள்ளன.

இவ்வருடம் உயர்தரப் பரீட்சைக்கு 333,185 மாணவர்கள் தோற்றவுள்ளனர்.

அவர்களுள் 253,390 பாடசாலை பரீட்ச்சார்த்திக ளும், 79,795 தனியார் பரீட்ச்சார்த்திகளும் பரீட்சைக்கு தோற் றவுள்ளனர்.




# இன்றும் விசேட ரயில் சேவைகள்

விசேட ரயில் சேவைகளை இன்றும் முன்னெடுப்பதாக ரயில்வே திணைக்களம் தெரிவித்துள்ளது.

நாடாளுமன்ற தேர்தல் மற்றும் நீண்ட வார விடுமுறையில் சொந்த இடங்களுக்கு சென்றவர்கள், கொழும்பிற்கு திரும்புவதற்காக இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதுள்ளதாக ரயில்வே திணைக்களம் குறிப்பிட்டுள்ளது.

வழமையான ரயில் சேவைகளுக்கு மேலதிகமாக சில ரயில்கள் சேவையில் இணைத்துக்கொள்ளப்படவுள்ளன.

கண்டி, பெலியத்தை மற்றும் மாத்தறை ஆகிய ரயில் நிலையங்களில் இருந்து கொழும்புக்கும், கொழும்பில் இருந்து ஹிக்கடுவை வரையிலும் விசேட ரயில் சேவைகள் முன்னெடுக்கப்படவுள்ளன.

அத்துடன், இன்று மாத்தறை, காலி ஆகிய ரயில் நிலையங்களில் இருந்து கொழும்பு வரையில் விசேட ரயில் சேவைகள் முன்னெடுக்கப்படவுள்ளன என ரயில்வே திணைக்களம் அறிவித்துள்ளது.

# 66 கடவுச்சீட்டுகளுடன் 2 சந்தேக நபர்கள் கைது




66 கடவுச்சீட்டுகளுடன் 2 சந்தேகநபர்கள் கஹதுடுவ பகுதியில் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கஹதுடுவ – சியம்பலாகொட பகுதியில் மேற்படி சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

சியம்பலாகொடயை சேர்ந்த 38 வயதுடைய ஆண் மற்றும் 42 வயதான பெண் ஆகியோரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர்.

வெளிநாட்டு வேலைவாய்ப்புகளை பெற்றுத்தருவதாகக் கூறி பலரிடமிருந்து 200,000 முதல் 300,000 ரூபா பணம் பெற்றுக்கொண்டுள்ளனர். அவர்களின் கடவுச்சீட்டுகளையும் சந்தேகநர்கள் பெற்றுக்கொண்டுள்ளனர்.

இராஜகிரிய பிரதேசத்திலுள்ள வீதியொன்றின் அருகில் இருந்துகொண்டு மேற்படி சந்தேகநபர்கள் இந்த சட்டவிரோத செயற்பாட்டில் ஈடுப்பட்டுள்ளனர் என கண்டறியப்பட்டுள்ளது.

தொழில் தேடுவோரை நேர்முகப்பரீட்சைக்கு அழைப்பதாகக் கூறி அவர்களிடம் இருந்து 2 முதல் 3 லட்சம் ரூபா வரை பணம் பெறப்பட்டுள்ளனர் எனவும் தெரியவந்துள்ளது.

கஹதுடுவ பொலிஸார் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

# 19 வைத்தியர்கள் இம்முறை நாடாளுமன்றுக்குத் தெரிவு

நாட்டின் பத்தாவது நாடாளுமன்றத்துக்கு தெரிவாகியுள்ள 225 உறுப்பினர்களில் 19 வைத்தியர்கள் உள்ளடங்குகின்றனர். இவர்களில் 16 பேர் தேசிய மக்கள் சக்தியைப் பிரதிநிதித்துவப்படுத்துகின்றனர்.

வைத்தியர் மொஹமட் ரிஸ்வி சாலி, வைத்தியர் கிரிசாந்த சில்வா அபேசேன, வைத்தியர் நிஹால் அபேசிங்க, வைத்தியர் நளிந்த ஜயதிஸ்ஸ, வைத்தியர் நிசாந்த சமரவீர, வைத்தியர் சாலிய சதருவன், வைத்தியர் ரணசிங்க, வைத்தியர் ஜகத் விக்கிரமரத்ன, வைத்தியர் ஜனக சேனாரத்ன, வைத்தியர் நாமல் சுதர்ஷன, வைத்தியர் நிஷாந்த ஜகத் குமார, வைத்தியர் முதித விஜயமுனி, வைத்தியர் பிரசன்ன குணசேன, வைத்தியர் மதுர செனவிரத்ன, வைத்தியர் பி.எச் தம்மிக, வைத்தியர் ஸ்ரீ பவனந்த ராஜா ஆகியோர் தேசிய மக்கள் சக்தியின் சார்பில் நாடாளுமன்றத்துக்கு தெரிவாகியுள்ளனர்.

இலங்கை தமிழரசுக் கட்சி சார்பில் போட்டியிட்ட வைத்தியர் இளையதம்பி ஸ்ரீநாத், சுயேச்சை குழு சார்பில் போட்டியிட்ட வைத்தியர் இராமநாதன் அர்ச்சுனா ஆகியோர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். தமிழரசு தேசியப் பட்டியல் மூலம் மருத்துவர் சத்தியலிங்கம் தெரிவாகியுள்ளார்.

## இரகசியம் பரகசியம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

பட்டியல் மூலம் சுமந்திரனே நாடாளுமன்றம் செல்ல வேண்டுமென்று சிறிதரன் தவிர்த்த ஏனைய எல்லோரும் வலியுறுத்திய போது, அந்த சமயத்திலும் மாவை குறுக்கிட்டார்.

"எனக்கு முதலில் அந்தப் பதவியைத் தாருங்கள். அப்படி அரசமைப்பு விவகார விடயம் நாடாளுமன்றுக்கு வரும் போது நான் உடனே ராஜினாமாச் செய்து சுமந்திரனுக்கு அந்த இடத்தை அளிப்பேன்" – என்றும் கூட கோருவதற்கு மாவை தவறவில்லை.

ஆரம்பத்தில் மாவையும், கட்சியின் நிர்வாக செயலாளர் குலநாயகமும் அப்பதவி தங்களுக்கு வழங்கப்பட வேண்டும் என்று கோரினர்.

ஆயினும் எழுபது வயதுக்கு மேல் இந்தப் பதவியைக் கோருவது சரியல்ல என்று குறிப்பிட்ட சி.வி.கே.சிவஞானம், மாவை சேனாதிராஜாவும் குலநாயகமும் 80 வயது தாண்டிய பின்னர் இந்தப் பதவியைக் கோருவது தார்மீகமாகாது என்று சுட்டிக் காட்டினார்.

அந்தக் கருத்தை உடனே ஒப்புக் கொண்ட குலநாயகம், அக்கருத்தின் அடிப்படையில் தான் அப்பதவியை தமக்கு வழங்குமாறு கோருவதில் இருந்து விலகிக் கொள்கின்றார் என அறிவித்தார். ஆனால் மாவை சேனாதிராஜா விட்டுக் கொடுக்க முன் வரவில்லை. கடைசியில் எல்லோரும் ஒன்று சேர்ந்து சத்தியலிங்கத்திற்கு அப்பதவியை கொடுப்பது என்ற தீர்மானத்தை எடுத்த போது கூட அதற்கு மாவையிடம் இருந்து ஒப்புதல் கிடைக்கவில்லை.

சத்தியலிங்கத்துக்கு அப்பதவியை வழங்கும் முடிவை ஏகமனதாக எடுக்க வேண்டும் என்று சுமந்திரன் வலியுறுத்திய பின்னரே, அப்படி சத்தியலிங்கத்திற்கு அதனை வழங்குவதற்கு விருப்பமின்றி தலையசைத்தார் மாவை சேனாதிராஜா.

கூட்டத்தில் பங்கு பற்றிய மாவை சேனாதிராஜா, சிறிதரன், குகதாசன் ஆகிய மூவரும் இந்தப் பதவி சுமந்திரனுக்கு வழங்கப்படுவதை ஆதரிக்கவில்லை. ஏனையோர் அனைவரும் இப்பதவியை சுமந்திரன் கட்டாயம் ஏற்றுக் கொள்ள வேண்டும் என்று வற்புறுத்தினர்.

இந்தப் பதவியை மாவை சேனாதிராஜாவுக்கு ஒரு வருடமும் பின்னர் குலநாயகத்துக்கு ஒரு வருடமும் கொடுக்கலாமென்று யோசனையை முன்வைத்த சிறிதரன், அரசமைப்பு உருவாக்க விடயங்களுக்கு சுமந்திரனின் பங்களிப்பு அவசியம்தான், ஆனால் அதனை அவர் எம்பியாக இருந்து கொண்டு செய்ய வேண்டும் என்பது அல்ல, வெளியில் இருந்தும் செய்யலாமென்று தெரிவித்தார்.

இன்னும் ஆறு மாதங்களில் மாகாண சபை தேர்தல் வரப்போகின்றது, அப்போது எம்.பி. பதவி சுமந்திரனின் மடியில் தானாக வந்து விழும் என்றும், அதற்கு அவர் அவசரப்பட தேவையில்லை என்றும் கூறினார் சிறிதரன்.

விரைவில் வரக் கூடும் எனக் கருதப்படும் மாகாண சபை தேர்தலில் முதலமைச்சர் பதவிக்குத் தான் களமிறங்க இருப்பதை மனதில் வைத்து, அதற்காகத் தான் பதவியை ராஜினாமா செய்யும் போது அந்தப் பதவி விருப்பு வாக்கில் அடுத்த நிலையில் இருக்கும் சுமந்திரனின் கைகளுக்கு போகும் என்பதையே சிறிதரன் அவ்வாறு கோடி காட்டினார், ஆயினும் அவர் அதனைத்தானா குறிப்பிடுகின்றார் என்று கூட்டத்தில் பங்கு பற்றிய எவரும் கேட்கவில்லை.

குகதாசன் ஆரம்பத்தில் இந்தத் தேசியப் பட்டியல் எம்.பி. பதவி ஒரு பெண் பிரதிநிதிக்கு வழங்கப்பட வேண்டும் என்று வற்புறுத்தினார். ஆயினும் பின்னர் ஏனையோர் அந்தப் பதவியை சத்தியலிங்கத்துக்கு வழங்கும் முடிவை எடுத்த போது அதற்கு தமது இசைவைத் தெரிவித்தார்.

மாவை சேனாதிராஜாவோ, அந்தப் பதவி கடைசி வரை தனக்கே வழங்கப்பட வேண்டும் என்ற வலியுறுத்தலோடு நின்றார்.

கடைசியாகக் கருத்து வெளியிட்ட சுமந்திரன், தாம் நாடாளுமன்றுக்கு வெளியில் இருந்து ஆற்றிய பணிகளுக்காகவே நாடாளுமன்ற உறுப்பினர் பதவியை தமிழரசு கட்சி தனக்கு முன்னர் வழங்கியது என்பதை சுட்டிக் காட்டியமையுடன், இனிமேலும் நாடாளுமன்றுக்கு வெளியில் இருந்து, அந்த விடயங்களை தொய்ய விடாமல் தம் கவனிப்பார் என்று உறுதி அளித்தார். சிறிதரன் சுட்டிக் காட்டியமை போல அரசமைப்பு உருவாக்க விடயங்களுக்கு தாம் நாடாளுமன்றத்துக்குள் இருந்துதான் பணியாற்ற வேண்டும் என்ற கட்டாயம் இல்லை என்று கூறிய சுமந்திரன், ஆகவே மக்கள் தெரிவு மூலம் நாடாளுமன்றுக்கு செல்லாமல், தேசியப் பட்டியல் மூலம் நாடாளுமன்றுக்குத் தாம் செல்ல விரும்பவில்லை என்று தெளிவாகவும் உறுதியாகவும் கூறினார்.

நாடாளுமன்ற உறுப்பினராக இருக்கும் ஒருவரே கட்சியின் பேச்சாளராக இருப்பதும் பொருத்தமானது என்று குறிப்பிட்ட சுமந்திரன், அத்தகைய ஒருவரை அரசியல் குழுவோ, நாடாளுமன்ற குழுவோ தெரிவு தெரிவு செய்ய வேண்டும் என்பதோடு, அத்தகைய தெரிவை அடுத்துத் தான் கட்சிப் பேச்சாளர் பதவியை விட்டு விலகத் தயார் என்றும் அறிவித்தார்.

ஆயினும் சுமந்திரன் அப்படிப் பதவி விலகுவதை ஏற்றுக்கொள்ளாத சிறிதரன் அவர் தொடர்ந்தும் கட்சியின் பேச்சாளராக விளங்கட்டும், நாடாளுமன்றக் குழு அக்குழுவின் பேச்சாளராக ஒருவரை தனக்குள் கூடி முடிவு செய்யும் என்று குறிப்பிட்டார்.

நேற்று இந்தக் கூட்டத்தை முடித்துக் கொண்டு சுமந்திரன் கொழும்பு விரைந்தார்.

குருந்தூர்மலை விவகாரத்தை ஒட்டித் தாக்கல் செய்யப்பட்டுள்ள அடிப்படை உரிமை மீறல் மனு இன்று காலை உயர் நீதிமன்றத்தில் எடுத்துக் கொள்ளப்பட இருப்பதால் அதன் மீதான விவாதத்தில் பங்குபற்றுவதற்காகவே சுமந்திரன் கொழும்பு விரைந்தார்.

சிறிதரனும், சார்ள்ஸ் நிர்மலநாதனும் இந்தக் குருந்தூர் மலை வழிபாட்டு உரிமை தொடர்பான அடிப்படை உரிமை மீறல் மனுவின் மனுதாரர்கள். அவர்கள் இருவர் சார்பில் உயர் நீதிமன்றத்தில் முன்னிலையாகி வாதிடவே சுமந்திரன் நேற்று கட்சியின் அரசியல் குழு கூட்டத்தை முடித்துக் கொண்டு அவசர அவசரமாக கொழும்பு விரைந்தார்.

அரசியல் குழப்பங்கள், களேபரங்கள் எப்படி இருந்தாலும், தம்முடைய சட்டத் துறை ஒத்துழைப்பு கட்சிக்கும் தமிழ் தேசியத்தின் அடிப்படை நடவடிக்கைகளுக்கும் எப்போதும் இருக்கும் என்று சுமந்திரன் அந்த கூட்டத்தில் தெரிவித்தார் என்பது கவனிக்கத்தக்கது.

பொதுத் தேர்தல் அறிவிக்கப்பட்டு, பிரசாரங்கள் ஆரம்பிக்கப்பட வேண்டிய நேரத்தில், தாம் கட்சியின் தலைவர் பதவியில் இருந்து வெளியேறுகின்றார் என்ற சாரப்பட மாவை சேனாதிராஜா குழப்பகரமான பகிரங்க அறிவிப்பை வெளியிட்டமை கட்சியைப் பெரும் நெருக்கடிக்குள் ஆழ்த்தியது என்று நேற்றைய கூட்டத்தில் பங்கு பற்றிய பலரும் மாவையைப் பொரிந்து தள்ளினர்.

மட்டக்களப்புப் பிரதிநிதி சாணக்கியன், மாவையரின் இந்த அறிவிப்பு பிரசார நடவடிக்கைக்குப் போன இடம் எல்லாம் தங்களுக்கு நெருக்கடி தரும் கேள்விகளை எழுப்பியதாக குறிப்பிட்டு மாவையை ஒரு வாங்கு வாங்கினார்.

இவ்விடயத்தில் எல்லோரது திட்டுக்களுக்கும் ஏச்சுகளுக்கும் இலக்கான மாவை சேனாதிராஜா அவை குறித்து பொருட்படுத்தாமல் கூட்டத்தில் அமர்ந்திருந்தார். எருமை மாட்டில் மழை பெய்தது போல இவ்விடத்தில் எல்லோரது குற்றச்சாட்டும் அவரால் கவனிக்கப்படாமல் அவமாகிப் போயின.

இந்தத் தள்ளாத வயதிலும் எம்.பி. பதவிக்கு ஆசைப்பட்டு மாவை நடந்து கொண்ட விதம் கூட்டத்தில் பங்கு பற்றிய எல்லோராலும் எரிச்சலுடன் நோக்கப்பட்டது என்பது குறிப்பிடப்பட வேண்டிய விடயமாகும்.

## யாழ்.வருகிறார்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

நாளை யாழ்ப்பாணத்துக்கு வருகை தரும் சீனத் தூதுவர் இங்கு இரண்டு நாட்கள் தங்கவுள்ளார்.

இந்தக் காலப் பகுதியில் அவர் பலரையும் சந்தித்துக் கலந்துரையாடவுள்ளார் என்று தெரிவிக்கப்படுகின்றது.

## மனோவுக்குத்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

தேசியப் பட்டியல் விவகாரம் தொடர்பில் விரைவில் தீர்மானம் எடுக்கப்படும் என்றும் அவர் மேலும் குறிப்பிட்டார்.





# தேசிய மக்கள் சக்தியில் இருந்து 13 தமிழர்கள் சபைக்குத் தெரிவு

பத்தாவது நாடாளுமன்றத்துக்கு அரசியல் கட்சிகளில் இருந்தும் சுயேச்சைக் குழுவில் இருந்தும் மக்கள் ஆணை மூலம் 25 தமிழர்கள் தெரிவாகியுள்ளனர்.

இலங்கைத் தமிழரசுக் கட்சிக்கு கிடைக்கப்பெற்ற தேசியப் பட்டியல் ஆசனம் ஊடாக வைத்தியர் ப. சத்தியலிங்கத்தைச் சபைக்கு அனுப்புவதற்கு அக்கட்சியின் அரசியல் குழு தீர்மானித்துள்ளது.

தேசிய மக்கள் சக்தியின் தேசியப் பட்டில் வேட்பாளராக இடம்பிடித்த இராமலிங்கம் சந்திரசேகரும் நாடாளுமன்றம் வருகின்றார்.

ஐக்கிய மக்கள் சக்தியும் தமிழர் ஒருவருக்குத் தேசியப் பட்டியலில் இடமளித்தால் அமையவுள்ள நாடாளுமன்றத்தில் 28 தமிழ் எம்.பிக்கள் அங்கம் வகிப்பார்கள். ஐக்கிய மக்கள் சக்தி இடமளிக்காவிட்டால் தமிழ் எம்.பிக்களின் எண்ணிக்கை 27 ஆக அமையும்.

2020 பொதுத்தேர்தலில் மக்கள் ஆணை மூலம் 25 தமிழ் எம்.பிக்கள் தெரிவாகி இருந்தனர். தேசியப் பட்டியல் ஊடாக மூவருக்கு இடமளிக்கப்பட்டிருந்தது. அந்தவகையில் கடந்த நாடாளுமன்றத்திலும் 28 தமிழ் எம்.பிக்கள் அங்கம் வகித்தனர்.

10 ஆவது நாடாளுமன்றத்தில் இடம்பெறவுள்ள தமிழ் எம்.பிக்கள் விபரம்:-

+ இலங்கைத் தமிழரசுக் கட்சி – 08

01. சிவஞானம் சிறிதரன் (யாழ்ப்பாணம்) – 32,833
02. இரா. சாணக்கியன் (மட்டக்களப்பு) – 65,458
03. ஞானமுத்து ஸ்ரீநேசன் (மட்டக்களப்பு) – 22,773
04. இளையதம்பி சிறிநாத் (மட்டக்களப்பு) – 21,202
05. சண்முகம் குகதாசன் (திருகோணமலை) – 18,470
06. துரைராசா ரவிகரன் (வன்னி) – 11,215
07. கவீந்திரன் கோடீஸ்வரன் – 11,962
08. ப. சத்தியலிங்கம் (தேசியப் பட்டியல்)

+ இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் – 01

நாடாளுமன்றத் தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சியின் யானை சின்னத்தின் கீழ் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் வேட்பாளர்கள் நுவரெலியா மாவட்டத்தில் போட்டியிட்டனர். ஜீவன் தொண்டமான் 46 ஆயிரத்து 438 வாக்குகளைப் பெற்று வெற்றி பெற்றார். (கடந்த பொதுத் தேர்தலில் இ.தொ.காவுக்கு இரண்டு ஆசனங்கள் கிடைக்கப் பெற்றன.)

+ தமிழ் முற்போக்குக் கூட்டணி – 02

பொதுத் தேர்தலில் ஐக்கிய மக்கள் சக்தியுடன் கூட்டணி அமைத்து போட்டியிட்ட தமிழ் முற்போக்குக் கூட்டணிக்கு நுவரெலியாவில் மாத்திரமே இரண்டு ஆசனங்கள் கிடைக்கப் பெற்றன.

01. பழனி திகாம்பரம் (நுவரெலியா) – 48,018
02. வீ. இராதாகிருஷ்ணன் (நுவரெலியா) – 42,273

(கடந்த பொதுத் தேர்தலில் தமிழ் முற்போக்குக் கூட்டணிக்கு நுவரெலியா, கண்டி, பதுளை, கொழும்பு ஆகிய மாவட்டங்களில் மொத்தமாக ஆறு ஆசனங்கள் கிடைக்கப் பெற்றிருந்தன.)

+ தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி – 01

01. கஜேந்திரகுமார் பொன்னம்பலம் (யாழ்ப்பாணம்) – 15,135

+ சுயேச்சைக் குழு 17 – 01

01. இராமநாதன் அர்ச்சுனா (யாழ்ப்பாணம்) – 20,487

+ சங்கு – 01

01. செல்வம் அடைக்கலநாதன் வன்னி – 5,695

+ தேசிய மக்கள் சக்தி – 13

01. கிட்ணன் செல்வராஜா (பதுளை) – 60,041
02. அம்பிகா சாமுவேல் (பதுளை) – 58, 201
03. கே. பிரபு (மட்டக்களப்பு) – 14,856
04. கே.இளங்குமாரன் (யாழ்ப்பாணம்) – 32,102
05. எஸ்.ஸ்ரீ பவானந்தராஜா (யாழ்ப்பாணம்) – 20,430
06. ஜெயச்சந்திரமூர்த்தி ரஜீவன் (யாழ்ப்பாணம்) – 17,579
07. சரோஜா போல்ராஜ் (மாத்தறை) – 148,379
08. கிருஷ்ணன் கலைச்செல்வி (நுவரெலியா) – 33,346
09. எஸ். பிரதீப் – 112,711 (இரத்தினபுரி)
10. அருன் ஹேமச்சந்திர (திருகோணமலை) – 38,368
11. செல்வதம்பி திலகநாதன் (வன்னி) – 10,652
12. மயில்வாகனம் ஜெகதீஸ்வரன் – 9,280 (வன்னி)
13. இராமலிங்கம் சந்திரசேகர் (தேசியப் பட்டியல்)

## வடமாகாண மரநடுகை மாதம் கார்த்திகை – 2024



“மரங்களைக் காற்றைச் சலவை செய்யும் இயந்திரங்களாகவும், குளிர்விக்கும் பதனப்படுத்திகளாகவும் சொல்லித்தரும் அறிவியலும், உயிர்காக்கும் மரங்களைப் பணங் காய்ச்சி மரங்களாகப் போதிக்கும் பொருளியலும் ஆதிக்கம் பெற்றுள்ள நிலையில் மரங்களுக்கும் எமக்கும் இடையிலான பண்பாட்டு உறவை மீட்டுருவாக்கம் செய்வது அவசியம் ஆகும். இந்தப் பண்பாட்டு உறவே மரங்கள் மதீனா பற்றுதலை வளர்க்கும்.”

பொ.ஐங்கரநேசன் தலைவர் - தமிழ்த்தேசியப் பசுமை இயக்கம்

# இந்த நாட்டில் தீர்க்கப்படாத பிரச்சினைகளை அநுரகுமார அரசு தீர்க்கும் என நம்புகின்றேன்

## தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைவர் தெரிவிப்பு

(எஸ். சதீஸ்)

"இம்முறை நாடாளுமன்றத் தேர்தலில் ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவுக்கும் தேசிய மக்கள் சக்திக்கும் மூன்றில் இரண்டு பெரும்பான்மை கிடைத்திருக்கின்றது. இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி இந்த நாட்டிலே தீர்க்கப் படாத பிரச்சினைகளை அநுரகுமார அரசு தீர்க்கும் என நாம் நம்புகின்றோம்."

– இவ்வாறு தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைவர் அருள்மொழிவர்மன் தம்பிமுத்து தெரிவித்தார்.

தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைவர் அருண்மொழி வர்மன் தம்பிமுத்துவின் ஊடக சந்திப்பு நேற்று ஞாயிற்றுக்கிழமை மட்டக்களப்பில் உள்ள அவரது அலுவலகத்தில் நடைபெற்றது. அதன்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில்,

"இலங்கையில் நடந்து முடிந்த நாடாளுமன்றத் தேர்தலில் தமிழர் விடுதலைக் கூட்டணியை ஆதரித்து வாக்களித்த அனைத்து மக்களுக்கும் எனது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன். தற்போது இலங்கையில் நாடாளுமன்றத்தில் புதிய அரசு பதவியேற்க இருக்கின்றது. அநுரகுமார திஸாநாயக்கவுக்கும் அவரது தேசிய மக்கள் சக்திக்கும் மூன்றில் இரண்டு ஆசனங்கள் கிடைக்கப் பெற்றிருக்கின்றன.

இந்தச் சந்தர்ப்பத்தை அவர்கள் முழுமையாகப் பாவித்து இந்த நாட்டிலே தீர்க்கப்படாத பல விடயங்களைத் தீர்ப்பார்கள் என்ற நம்பிக்கை எமக்கு இருக்கின்றது. அதை அவர்கள் கையில் எடுக்க வேண்டும் என்ற விடயத்தையும் நான் அவர்களுக்கு வலியுறுத்தக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

அதேபோல் எமது ஆதரவாளர்களர்களும் தமிழர் விடுதலைக் கூட்டணியானது 20 வருடங்களுக்கு பின்னர் மீண்டும் புத்தெழுச்சி பெற வேண்டும் என்று கடுமையாக உழைத்துக் கொண்டிருக்கின்றார்கள்.

எமது கட்சியின் ஆதரவாளர்களுக்கு நான் கூற விரும்பும் விடயம் என்னவென்றால் எமது செயற்பாடு தொடர்ச்சியாக முன்னெடுக்கப்படும். தமிழர் விடுதலை கூட்டணியானது தற்போது ஏற்பட்டிருக்கின்ற இந்தநிலையில் இருந்து முழுமையாக புத்தெழுச்சி பெறும் என்ற முழுமையான நம்பிக்கை எனக்கு இருக்கின்றது. அதற்கான வேலைத்திட்டங்களை நான் முன்னெடுத்துச் செல்ல இருக்கின்றேன்.




மட்டக்களப்பில் மாற்றத்தைக் கொண்டு வர வேண்டும், மட்டக்களப்பில் ஒரு புதிய அரசியலை முன்னெடுக்க வேண்டும் என்று எமது ஆதரவாளர்களுக்கு நான் கூறியிருக்கின்றேன். அதன் அடிப்படையில் நாங்கள் செயற்பாடுகளையும் முன்னெடுக்கவிருக்கின்றோம்.

இன்று மட்டக்களப்பில் மக்களால் தேர்வு செய்யப்பட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களுக்குப் பல கடமைகள் இருக்கின்றன. மட்டக்களப்பு மாவட்டத்தில் தீர்க்கப்படாத பல பிரச்சினைகள் இருக்கின்றன. நிச்சயமாக எமக்கான நிலப் பிரச்சினை இருக்கின்றது. இன்னும் சொல்ல வேண்டுமென்றால் மேய்ச்சல் தரை பிரச்சினை இருக்கின்றது, வளங்கள் சூறையாடப்படும் நிலைமை காணப்பட்டு வந்திருக்கின்றது. இதற்கெல்லாம் எமது நாடாளுமன்ற உறுப்பினர்கள் குரல் கொடுக்க வேண்டும்.

நானும் ஒரு நிழல் நாடாளுமன்ற உறுப்பினராக இந்த மாவட்டத்திலே தொடர்ச்சியாக எனது நிலைப்பாட்டை, பாதுகாப்பை வலுப்படுத்துவதற்கான செயற்பாடுகளை முன்னெடுத்துச் செல்வேன் என்றும் கூறிக்கொள்ள விரும்புகின்றேன்." – என்றார்.

## அதிகாரப் பகிர்வு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

நாடாளுமன்றத் தேர்தலில் மூன்றில் இரண்டு பெரும்பான்மையுடன் ஆட்சியமைத்துள்ள தேசிய மக்கள் சக்திக்கு வாழ்த்துத் தெரிவித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

அந்த அறிக்கையின் முழு விபரம் வருமாறு:-

"நடந்து முடிந்த நாடாளுமன்றத் தேர்தலில் ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணிக்கு வாக்களித்த 65ஆயிரத்திற்கும் மேற்பட்ட மக்களுக்கும் வாக்களிப்பில் கலந்துகொண்ட கலந்துகொள்ளாத ஏனைய மக்களுக்கும் எமது நன்றிகள்.

வரலாற்றில் முதன்முறையாக விகிதாசார பிரதிநிதித்துவத்தின் கீழ் மூன்றில் இரண்டு பெரும்பான்மைக்குமேல் கொடுத்து ஓர் இடதுசாரி கட்சியை ஆட்சியில் அமர்த்திய மக்களுக்கு எமது வாழ்த்துகள். ஆட்சியில் அமர்ந்திருக்கக்கூடிய தேசிய மக்கள் சக்திக்குப் பெருமளவிலான சுமை தலைமேல் சுமத்தப்பட்டுள்ளது.

பொருளாதாரத்தை ஸ்திரப்படுத்த வேண்டும். தமிழ் மக்களின் தேசிய இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண வேண்டும். புதிய அரசியல் சாசனம் ஒன்றை உருவாக்க வேண்டும். வெளிநாடுகளில் வாங்கிய கடன்களை அடைக்கத் தொடங்க வேண்டும். உள்நாட்டில் அவர்களை நம்பி வாக்களித்த இளைஞர், யுவதிகளுக்கு வேலைவாய்ப்புகளை உருவாக்க வேண்டும். போரால் பாதிக்கப்பட்ட வடக்கு, கிழக்கு மாகாணங்களுக்கென பிரத்தியேக பொருளாதாரத் திட்டங்களை உருவாக்கிச் செயற்படுத்த வேண்டும். இவ்வாறு பல பொறுப்புகளும் கடமைகளும் இருக்கின்றன. இதற்கு மேலதிகமாக சர்வதேச சமூகம் ஏற்றுக்கொள்ளக்கூடிய பொருளாதாரக் கொள்கை, வெளியுறவுக் கொள்கை போன்றவையும் நாட்டின் எதிர்கால முன்னேற்றத்திற்கு மிகவும் முக்கியமானவை.

புதிய அரசும் புதிய நாடாளுமன்ற உறுப்பினர்களும் இணைந்து அனைத்து கடமைகளையும் செய்து முடிக்க வேண்டிய கட்டாயம் ஏற்படுத்தப்பட்டுள்ளது. புதிய அரசு முந்தைய ஆட்சியாளர்கள் வெற்றிக்களிப்பில் திளைத்தது போல் அல்லாமல் தனது கடமைகளையும் பொறுப்பையும் உணர்ந்து சரியான திசைவழியில் பயணிக்கும் என்று எதிர்பார்க்கின்றோம்.

தமிழ் மக்கள் நீண்டகாலமாக ஓர் அதிகாரப் பகிர்வுக்காகப் போராடி வந்திருக்கின்றனர். அதற்காக நீண்டகாலப் போர் ஒன்றும் இந்த மண்ணில் நடைபெற்றது. எந்தவொரு அரசுக்கும் கொடுக்காத ஆதரவை வரலாற்றில் முதல் தடவையாக வடக்கு, கிழக்கு வாழ் தமிழ் மக்கள் தேசிய மக்கள் சக்திக்குக் கொடுத்துள்ளனர். அதுமாத்திரமல்லாமல் ஒட்டுமொத்த நாட்டு மக்களும் மூன்றில் இரண்டு பெரும்பான்மையையும் வழங்கியுள்ளனர். இந்நிலையில் நாடு எதிர்நோக்கும் பிரச்சினைகளில் முதன்மைப்படுத்தக்கூடிய ஒன்றாக தேசிய இனப்பிரச்சினை இருக்கின்றது என்பதைப் புரிந்துகொண்டு அதிகாரங்களைப் பகிர்ந்துகொள்வதானது இனங்களுக்கிடையில் உண்மையான நல்லிணக்கத்தையும் பரஸ்பர நம்பிக்கையையும் கட்டியெழுப்பும் என்று நாங்கள் நம்புகின்றோம்." – என்றுள்ளது.

# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்



259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## தேர்தல் கணக்கு வழக்கு

பொதுத் தேர்தல் நடந்து முடிந்து விட்டது. ஆயினும், தேர்தல் தொடர்பான தொடர் நடவடிக்கைகள் உடன் முடிந்து விடப் போவதில்லை.

தேர்தலில் வென்றவர்களுக்கு மட்டுமல்ல, தோற்றவர்களுக்கும் கூட இன்னும் தேர்தல் விவகாரம் முடிந்துவிடவில்லை. மழை விட்டும் தூவானம் விடாத மாதிரித்தான் நிலைமை.

பிரசாரக் காலத்தை ஒப்பேற்றி விட்டாலும் இனி செய்ய வேண்டிய விவகாரம் சிக்கலானது.

தேர்தல் பிரசாரக் செலவு தொடர்பான கணக்கு வழக்குகளை அனைத்து வேட்பாளர்களும் தேர்தல் திணைக்களத்துக்கு வழங்கியாக வேண்டும். அது ஒரு கண்-துடைப்பு வேலையாக நடத்தி முடிக்கக் கூடிய விவகாரம் அல்ல.

தேர்தல் செலவு அறிக்கையை சமர்ப்பிக்காத அனைத்து வேட்பாளர்கள், அரசியல் கட்சிகள் மற்றும் சுயேச்சைக் குழுக்களுக்கு எதிராகவும் வழக்குத் தாக்கல் செய்யப்படும் எனத் தேர்தல்கள் ஆணைக் குழு தெரிவித்துள்ளது.

தேர்தல் செலவுகள் ஒழுங்குமுறைச் சட்டத்தின்படி, தேர்தல் நிறைவடைந்த 21 நாள்களுக்குள் அனைத்து செலவு அறிக்கைகளையும் தேர்தல்கள் ஆணைக்குழுவிற்குச் சமர்ப்பிக்க வேண்டும்.

பல்வேறு அரசியல் கட்சிகள் மற்றும் சுயேச்சைக் குழுக்களைச் சேர்ந்த 8,888 வேட்பாளர்கள் பொதுத் தேர்தலில் போட்டியிட்டனர்.

இந்நிலையில் தத்தமது தேர்தல் செலவு அறிக்கையை சமர்ப்பிக்குமாறு வேட்பாளர்களிடம் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

இது தவிர, வேட்பாளர்கள் சொத்துப் பொறுப்பு அறிக்கைகளையும் சமர்ப்பிக்க வேண்டும்.

தேர்தல் செயற்பாட்டில் வெளிப்படைத் தன்மையை உருவாக்கவும், ஏனைய வேட்பாளர்களுக்கு அநீதி இழைக்கப்படுவதைத் தடுக்கும் நோக்கிலும் செலவின அறிக்கைச் சட்டம் உள்ளது.

இந்த இரண்டு விடயங்களுக்கும் கட்டுப்பட்டு நடக்காத வேட்பாளர்கள, நீதிமன்ற நடவடிக்கைகளையும் அதன் பெறுபேறாகத் தண்டனைகளையும் எதிர்கொள்ள வேண்டி நேரிட்டாலும் நேரலாம். குடியியல் உரிமை, வாக்களிக்கும் உரிமை போன்றவை மூன்று ஆண்டுகள் வரை இடைநிறுத்தப்படும் ஆபத்தும் உண்டு.

தேர்தல் நடைபெற்ற காலத்தில் தேர்தல் ஆணையம் ஒவ்வொரு கட்சியினதும், சுயேச்சைக் குழுவினதும் அவற்றின் வேட்பாளர்களினதும் நடவடிக்கைகள், செலவினங்கள் போன்றவற்றை சுயாதீன கண்காணிப்பாளர்கள் மூலம் கண்காணித்துப் பதிவு செய்து வைத்துள்ளது.

அந்தப் பின்புலத்தில் வேட்பாளர்களின் வரவு - செலவு விவரம் கணக்காய்வு செய்யப்படும்.

தேர்தல் திணைக்களத்தின் கண்களுக்கு மண்ணை தூவி விட்டு, அதன் காதில் பூச்சுற்றும் விதத்தில் வேட்பாளர்கள் தங்கள் செலவு விவரங்களைச் சமர்ப்பிப்பார்களாயின் அது தொடர்பிலும் காத்திரமான - சரியான - சட்ட நடவடிக்கை எடுக்கத் தேர்தல் ஆணையம் தயாராக இருப்பதாகக் கூறப்படுகிறது.

தேர்தல் பிரசார கணக்கு வழக்கு விவகாரங்களில் தேர்தல் திணைக்களம் இம்முறை கண்ணுக்குள் எண்ணை விட்டுக் கொண்டு மிக அவதானமாக இருக்கின்றது.

இந்தத் தேர்தல் பிரசார செலவின அறிக்கைச் சட்ட விடயம் இந்தத் தேர்தலில் முழுமையாகவும் முறையாகவும் நடைமுறைப்படுத்தப்படுவதில் தேர்தல் ஆணையம் மிகவும் அவதானமாக இருப்பதாகவும் கூறப்படுகின்றது. இந்தச் சட்டம் இப்போதுதான் தேர்தல் ஆணையத்தினால் முழுமையாக நடைமுறைப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அதனை உரிய முறையில் - நியாயமான வழியில் - தேர்தல் ஆணையம் நடைமுறைப் படுத்தியே தீரும்.

வேட்பாளர்களும் அரசியல் கட்சிகளும் சுயேச்சைக் குழுக்களும் இது விடயத்தில் ஒளித்துப் பிடித்து விளையாட முடியாது என்பதுதான் கள நிலைவரமாகும்.

வேட்பாளர் பட்டியலை நிரப்புவதற்கு ஆள்கள் இல்லாத சூழ்நிலையில் அதற்குத் தமது பெயரை இயைந்து கொடுத்தவர்கள் கூட இப்போது இந்தச் சட்டத்துக்கு அமைவாக செயறபடாவிட்டால் - கணக்கு வழக்குகளை ஒப்படைக்காவிட்டால் - சட்டச் சிக்கலை எதிர்கொள்ள வேண்டியதுதான்.



# கண்டம் விட்டு கண்டம் பாயும் ஏவுகணையை வெற்றிகரமாக சோதனை செய்தது இந்தியா

இந்தியா கண்டம் விட்டு கண்டம் பாயும் ஹைப்பர் சொனிக் ஏவுகணையொன்றை வெற்றிகரமாக சோதனை செய்துள்ளது.

இந்திய வரலாற்றில் முதன்முறையாக இந்த வகை ஏவு கணையை சோதனை செய்துள்ளதாக அந்நாட்டு பாதுகாப்பு அமைச்சர் ராஜ்நாத் சிங் குறிப்பிட்டுள்ளார்.

அப்துல் கலாம் தீவு என அழைக்கப்படும் வீலர் தீவில் மேற்படி ஏவுகணை சோதனை செய்யப்பட்டுள்ளது.

இதன் மூலம் இந்தியா வரலாற்று மைல் கல்லை அடைந்துள்ளதாகவும் பாதுகாப்பு அமைச்சர் ராஜ்நாத் சிங் தனது எக்ஸ் திவில் தெரிவித்துள்ளார்.

# புழல் சிறைச்சாலையில் அடைக்கப்பட்டார் கஸ்தூரி



தெலுங்கு மக்கள் குறித்து சர்ச்சைக்குரிய வகையில் கருத்து தெரிவித்த வழக்கில் கைது செய்யப்பட்ட நடிகை கஸ்தூரி புழல் சிறையில் அடைக்கப்பட்டார்.

முன்னதாக அவர் ‘அரசியல் அராஜகம் ஒழியட்டும்’ என கோஷமிட்டதால் பரபரப்பு ஏற்பட்டது.

கஸ்தூரியை கைது செய்யும் நடவடிக்கையில் எழும்பூர் பொலிஸாரும், மதுரை பொலிஸாரும் தனித்தனியாக தனிப் படை அமைத்து தேடுதல் வேட்டையில் ஈடுபட்டு வந்த நிலையில், தெலுங்கானா மாநிலம் ஹைதராபாத் அருகே உள்ள பப்பலக்குடா பகுதியில் தெலுங்கு சினிமா தயாரிப்பாளர் ஹரிகிருஷ்ணனின் பங்களா வீட்டில் அவர் தங்கி இருக்கும் தகவல் சென்னை தனிப்படை பொலிஸாருக்கு கிடைத்தது. அதன்பேரில் பொலிஸார் அங்கு சென்று நடிகை கஸ்தூரியை நேற்று முன்தினம் கைது செய்தனர்.

பின்னர் அவரை நேற்று சென்னை அழைத்து வந்தனர். சிந்தாதிரிப்பேட்டை பொலிஸ் நிலையத்தில் அவரிடம் சுமார் ஒரு மணி நேரம் விசாரணை நடத்தப்பட்டது. விசாரணை முடிந்தவுடன், நடிகை கஸ்தூரியை எழும்பூர் 5 ஆவது நீதிமன்றத்தில் மாஜிஸ்திரேட் ரகுபதி ராஜா முன்னிலையில் பொலிஸார் ஆஜர்ப்படுத்தினர்.

அப்போது அவரை எதிர்வரும் 29 ஆம் திகதி வரை நீதிமன்ற காவலில் சிறையில் அடைக்க மாஜிஸ்திரேட் ரகுபதி ராஜா உத்தரவிட்டார். இதையடுத்து, நடிகை கஸ்தூரியை பொலிஸார் புழல் சிறைக்கு அழைத்து சென்றனர். அங்கு அவர் மகளிர் சிறையில் அடைக்கப்பட்டார்.

நடிகை கஸ்தூரியிடம் விசாரணை நடத்தப்பட்ட சிந்தாதிரிப் பேட்டை துணை ஆணையர் அலுவலகத்திலும், எழும்பூர் நீதிமன்றத்திலும் அவருக்கு ஆதரவாக யாரும் வரவில்லை. வழக்கறிஞர் ஒருவர் மட்டும் உடன் இருந்தார்.

நடிகை கஸ்தூரியை சிந்தாதிரிப்பேட்டை பொலிஸ் நிலையத்துக்கு பொலிஸார் அழைத்து வந்தபோது சிரித்த முகத்துடன் காணப்பட்டார். விசாரணை முடிந்து, நீதிமன்றத்தில் ஆஜர்படுத்துவதற்கு பொலிஸார், வாகனத்தில் ஏற்றியபோது அவர், ‘அரசியல் அராஜகம் ஒழியட்டும். நீதி வெல்லட்டும்’ என்று ஆக்ரோஷமாக கோஷம் எழுப்பியதால் பரபரப்பு ஏற்பட்டது.

அதேபோன்று சிறைக்கு அழைத்து செல்லப்பட்ட போதும் அவர் பொலிஸ் வாகனத்தில் கோஷங்கள் எழுப்பியபடி சென்றார்.









# உக்ரைனில் போரிட 48,000 இற்கும் மேற்பட்ட கைதிகளை அனுப்பிய ரஷ்யாவின் கூலிப்படை

உக்ரைனில் போரிடுவதற்காக ரஷ்யாவின் வாக்னர் கூலிப்படை குழு 48,000 இற்கும் மேற்பட்ட கைதிகளை அனுப்பியிருந்ததாக மதிப்பிடப்பட்டுள்ளது.

கொலை போன்ற கொடூரமான குற்றச் செயல்களில் ஈடுபட்டவர்கள் போர் புரியச் செல்வதன் மூலம் தண்டனையிலிருந்து தப்பிப்பதாக ஆர்வலர்கள் தெரிவித்துள்ளனர்.

குற்றவியல் சட்டத்தின் கீழ் பாரிய தண்டனை பெற்ற ஏராளமானவர்கள், உக்ரைனில் ரஷ்யாவினால் மேற்கொள்ளப்படும் போரில் இணையும்போது அவர்கள் விடுவிக்கப்படுகின்றனர்.

போர் முனையிலிருந்து தாயகம் திரும்பும் ரஷ்யச் சிப்பாய்கள் தாங்கள் சட்டத்திற்கு அப்பாற்பட்டவர்கள் என எண்ணுகின்றனர் என அவர்கள் தெரிவித்துள்ளனர்.

ரஷ்ய அதிகாரப்பூர்வ ஊடகங்கள் அவர்களைத் தியாகிகள் எனத் தெரிவிக்கின்றன.

ரஷ்ய ஜனாதிபதி விளாடிமீர் புட்டினும், அவர்கள் ரஷ்யாவின் விசேடமானவர்கள் எனப் பாராட்டி வருகிறார் எனவும் ஆர்வலர்கள் குற்றஞ்சாட்டியுள்ளனர்.

வாக்னர் கூலிப்படையின் தலைவர் கடந்த வருடம் கொல்லப்பட்டதன் பின்னர், ரஷ்யச் சிறைகளிலிருந்து யுத்தத்திற்காக ஆட்சேர்ப்பு பணிகளை ரஷ்யாவின் பாதுகாப்பு அமைச்சு மேற்கொண்டு வருகிறது.

அதேவேளை, கைதிகளின் உரிமைகளைப் பாதுகாக்கும் தொண்டு நிறுவனம் கூட, யுத்தமுனையிலிருந்து நாடு திரும்பும் ரஷ்யக் கைதிகளின் நடவடிக்கைகளால் ரஷ்யாவின் குற்ற விகிதாசாரம் அதிகரித்து வருவதாகக் கவலை வெளியிட்டுள்ளது.











# இஸ்ரேல் பிரதமர் இல்லத்தை இலக்கு வைத்துத் தாக்குதல்

இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகுவின் இல்லத்தை இலக்கு வைத்து குண்டுத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

இஸ்ரேலின் வட பிராந்தியத்தின் சிசேரியா நகரில் அமைந்துள்ள பிரதமரின் இல்லத்தை இலக்கு வைத்து இந்த தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

எவ்வாறாயினும், தாக்குதல் நடத்தப்பட்ட சந்தர்ப்பத்தில் பிரதமர் நெதன்யாகு மற்றும் அவரது குடும்பத்தினர் இருக்கவில்லையென சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

இந்த தாக்குதலை யாரும் பொறுப்பேற்கவில்லை என குறிப்பிடப்பட்டுள்ளது.

தாக்குதல் குறித்த விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக இஸ்ரேலிய பாதுகாப்பு அமைச்சர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, கடந்த ஒக்டோபர் மாதம் இஸ்ரேல் பிரதமரின் இல்லத்தை இலக்கு வைத்து ஆளில்லா விமானத் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டமை குறிப்பிடத்தக்கது.





# 21 நாள்களுக்குள் வேட்பாளர்கள் தேர்தல் செலவை சமர்ப்பிக்கவும்




பொதுத் தேர்தல் முடிவுகள் அறிவிக்கப்பட்ட நாளிலிருந்து 21 நாள்களுக்குள், அதில் போட்டியிட்ட அனைத்து வேட்பாளர்களும் தங்களது செலவு அறிக்கையைத் தேர்தல்கள் செயலகத்துக்குச் சமர்ப்பிக்க வேண்டும்.

உரிய நேரத்தில் செலவு அறிக்கையைச் சமர்ப்பிக்காத வேட்பாளர்களுக்கு எதிராகச் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என தேர்தல்கள் ஆணையாளர் நாயகம் சமன் ஸ்ரீரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

2024 ஆம் ஆண்டு பொதுத் தேர்தலில் ஒரு வாக்காளருக்கு வேட்பாளர் ஒருவர் செலவிடக்கூடிய தொகை அடங்கிய விசேட வர்த்தமானி அறிவித்தல் கடந்த 15 ஆம் திகதி தேர்தல்கள் ஆணைக்குழுவினால் வெளியிடப்பட்டது.

இந்த முறை நாடாளுமன்றத் தேர்தலில் தேசியப் பட்டியல் வேட்பாளர்கள் உட்பட 225 நாடாளுமன்ற ஆசனங்களுக்காக 49 அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகள் மற்றும் 284 சுயேச்சைக் குழுக்களைச் சேர்ந்த 8, 888 வேட்பாளர்கள் போட்டியிட்டனர்.

வேட்பாளர் செலவின வர்த்தமானி அறிவித்தலில் வேட்பாளர் ஒருவர் அதிகளவு செலவு செய்யக்கூடிய மாவட்டம் கொழும்பு எனவும் அங்கு வாக்காளர் ஒருவருக்கான செலவிடக்கூடிய தொகை 114 ரூபா என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

ஒரு வேட்பாளர் குறைந்தளவு செலவு செய்யக்கூடிய மாவட்டமாக வன்னி தேர்தல் மாவட்டம் குறிப்பிடப்பட்டிருந்ததுடன், அந்த மாவட்டத்தில் வாக்காளர் ஒருவருக்குச் செலவிடக்கூடிய தொகை 82 ரூபாவாகக் குறிப்பிடப்பட்டிருந்தது.

ஒவ்வொரு தேர்தல் மாவட்டத்தின் சனத் தொகை, மக்கள் தொகை அடர்த்தி மற்றும் நிலப்பரப்பு ஆகியவற்றைக் கருத்தில் கொண்டு இந்த கணக்கீடுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன.

# சுற்றுலாப் பயணிகள் தொடர்ந்து அதிகரிப்பு



கடந்த மாதத்தில் மாத்திரம் 135,907 சுற்றுலாப்பயணிகள் நாட்டுக்கு வருகைதந்துள்ளனர் என சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை தெரிவித்துள்ளது.

அத்துடன் இந்த மாதத்தின் கடந்த 10 நாள்களில் மாத்திரம் 61,767 சுற்றுலாப்பயணிகள் நாட்டுக்கு வருகைதந்துள்ளனர்.

இதேவேளை, அதிகளவான சுற்றுலாப்பயணிகள் வருகைதரும் காலி கோட்டையில் அதிகமான கட்டாக்காலி விலங்குகள் திரிகின்றன என குறிப்பிடப்பட்டுள்ளது.

இதன் காரணமாக மேற்படி பகுதிகளுக்கு வரும் சுற்றுலாப் பயணிகள் பெரும் அசௌகரியங்களைச் சந்தித்துவருகின்றனர் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.




# நாணய நிதிய பிரதிநிதிகள் குழு நாட்டிற்கு வருகை தந்துள்ளது

சர்வதேச நாணய நிதியத்தின் பிரதிநிதிகள் குழு நேற்று நாட்டிற்கு வருகை தந்துள்ளது.

இலங்கை தொடர்பான மூன்றாவது மீளாய்வு நடவடிக்கைகளுக்காகவே இந்தக்குழு வருகை தந்துள்ளதாக நிதி அமைச்சு தெரிவித்துள்ளது.

பிரதிநிதிகள் குழு, ஜனாதிபதி, அமைச்சின் அதிகாரிகள் மற்றும் வங்கி உத்தியோகத்தர்களை சந்திக்க வுள்ளதாக நிதி அமைச்சு கூறியுள்ளது.

எதிர்வரும் வெள்ளிக் கிழமை மூன்றாவது மீளாய்வின் ஆரம்பகட்ட நடவடிக்கைகளை நிறைவு செய்வதற்கு சர்வதேச நாணய நிதியத்தின் பிரதிநிதிகள் குழு நடவடிக்கை எடுக்கும் என நிதி அமைச்சு குறிப்பிட்டுள்ளது.



# அமைதியாகவும் நியாயமாகவும் நடைபெற்று முடிந்தது தேர்தல்

## சர்வதேச தேர்தல் கண்காணிப்பாளர்கள் தெரிவிப்பு

2024 நாடாளுமன்றத் தேர்தல் அமைதியாகவும் நியாயமாகவும் நடைபெற்று முடிந்ததாக சர்வதேச தேர்தல் கண்காணிப்பாளர்கள் தெரிவித்துள்ளனர்.

நாடாளுமன்றத் தேர்தல் தொடர்பான தமது இறுதி அறிக்கையை சமர்பித்து சர்வதேச தேர்தல் கண்காணிப்பாளர்கள் இதனைக் குறிப்பிட்டுள்ளனர்.

தேர்தல்கள் ஆணைக்குழுவின் அழைப்பிற்கிணங்க நாட்டுக்கு வருகை தந்திருந்த 10 பேர் அடங்கிய தேர்தல் கண்காணிப்பாளர்கள் குழுவினால் இந்த இறுதி அறிக்கை வழங்கப்பட்டுள்ளது.

தேர்தல் வெளிப்படைத்தன்மையுடன் நடைபெற்றதாக அந்த அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளதாக தேர்தல் ஆணைக்குழுவின் தவிசாளர் ஆர்.ஏ.எம்.எல்.ரத்நாயக்க குறிப்பிட்டார்.

UNFEL மற்றும் ஐரோப்பிய ஒன்றிய தேர்தல் கண்காணிப்பு அதிகாரிகளின் இறுதி அறிக்கைகள் இன்று தேர்தல் ஆணைக்குழுவிடம் கையளிக்கப் படவுள்ளன.

10,000 இற்கும் மேற்பட்ட உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு தேர்தல் கண்காணிப்பாளர்கள் இம்முறை நாடாளுமன்றத் தேர்தலை கண்காணிக்கும் பணிகளில் ஈடுபட்டிருந்தனர்.

அவர்களில் 43 வெளிநாட்டு கண்காணிப்பாளர்களும் உள்ளடக்கப் பட்டிருந்தனர்.

ஐரோப்பிய ஒன்றியத்தின் தேர்தல் கண்காணிப்பாளர்கள் 3 பேரும், ருகேநுடு கண்காணிப்பு அமைப்பில் இருந்து 30 பேரும் நாட்டிற்கு வருகை தந்திருந்தனர்.

அண்டை நாடுகளில் இருந்து 10 தேர்தல் கண்காணிப்பாளர்கள் நாட்டுக்கு வருகை தந்திருந்தனர்.

10 அமைப்புகளை பிரதிநிதித்துவப்படுத்தி சுமார் 10,000 உள்ளூர் கண்காணிப்பாளர்கள் தேர்தல் கண்காணிப்பு பணிகளில் பங்கேற்றிருந்தனர்.

சுதந்திரமானதும் நீதியானதுமான தேர்தலுக்கான மக்கள் அமைப்பு எனப்படும் பவ்ரல் அமைப்பின் சார்பில் 5,000 தேர்தல் கண்காணிப்பாளர்கள் கடமைகளில் ஈடுபட்டிருந்தனர்.

நடமாடும் தேர்தல் கண்காணிப்பு நடவடிக்கைகளுக்காக 8 அமைப்புகளுக்கு அனுமதி வழங்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்க விடயமாகும்.

# தமிழ்த் தேசியக் கட்சிகளின் முகத்தில் பாய்ந்த 'தோல்வி' அம்புகள்!



புருஜோத்தமன் தங்கமயில்

'தேசமாய் திரள்வோம்' என்ற குரல்கள் மீண்டும் பலமாகக் கேட்கத் தொடங்கியிருக்கின்றன. தமிழ்த் தேசியக் கட்சிகளைத் தாண்டி தேசிய மக்கள் சக்தி யாழ்ப்பாணத்திலும் வன்னியிலும் பெற்றிருக்கின்ற அமோக 'வெற்றி' தந்திருக்கின்ற எரிச்சல், ஏமாற்றத்துக்கான உடனடி வலி நிவாரணி, 'தேசமாய் திரள்தல்' என்பது தமிழ்த் தேசியக் கட்சிகளினதும், தரப்புக்களினதும்



எண்ணம். ஆனால், உண்மையில் தேசமாய் திரள்தல் என்பது, ஆடி ஓய்ந்தவர்களை மீண்டும் நாடாளுமன்றத்துக்கும் அதிகாரப் பதவிகளுக்கும் அனுப்புதலை நோக்கமாகக் கொண்ட கட்சிகளின் ஒருங்கிணைப்பு ஓரணி நாடகமாக இருக்க வேண்டுமா? அல்லது தெளிவான செயற்திட்டங்களோடு, வடக்குக் கிழக்கில் தமிழ்த் தேசிய அரசியலை மங்காது பாதுகாத்து முன்நகர்வதில் தங்கியிருக்கிறதா? என்ற கேள்விகள் சார்ந்தது.

யாழ்ப்பாண நிர்வாக மாவட்டத்தில் தேசிய மக்கள் சக்தி, தனக்கு அடுத்த நிலையில் இருக்கின்ற இலங்கைத் தமிழரசுக் கட்சியை விட கிட்டத்தட்ட ஒன்றரை மடக்கு வாக்குகளை அதிகமாகப் பெற்றிருப்பதாக கொள்ள முடியும். இந்த வாக்குகள் எந்தெந்த தொகுதிகளுக்குள் இருந்து அதிகமாக கிடைக்கப் பெற்றிருக்கின்றன என்கிற விடயங்களை சற்று ஆராய்ந்தாலே, தேசிய மக்கள் சக்தியை நோக்கிய வாக்குத் திரட்சியின் அடிப்படைகளைப் புரிந்து கொள்ள முடியும். குறிப்பாக, யாழ்ப்பாணம், நல்லூர் மற்றும் மானிப்பாய் தேர்தல் தொகுதிகளில் தேசிய மக்கள் சக்தி பெற்றிருக்கின்ற கணிசமான வாக்குகள், தமிழ் மக்களிடையே காணப்படும் சாதிய, சமூக, பொருளாதார ஏற்றத்தாழ்வுகளை அப்பட்டமாக வெளிக்காட்டுகின்றன. தமிழ்த் தேசியம் பேசும் கட்சிகளாக, குழுக்களாக தங்களை முன்னிறுத்தும் தமிழரசுக் கட்சி, அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ், ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டணி என்று தொடங்கி சுயேச்சைக் குழுக்கள் வரையில் பலரையும், கணிசமான மக்கள் புறக்கணித்திருக்கிறார்கள் என்பதை இந்தத் தேர்தல் முடிவுகள் காட்டுகின்றன. அந்தப் புறக்கணிப்பின் பின்னால், ஆக்கபூர்வமற்ற போலியான தேசிய உரையாடல்களும், சமூகங்களுக்கு இடையிலான இடைவெளியை முறையாக சரிசெய்ய முடியாமை என்கிற பேதமையும் இருக்கின்றன. தமிழ்த் தேசியக் கட்சிகள் பெரும்பாலும், யாழ்ப்பாணத்தின் மேலாதிக்க சமூகத்தின் பிரதிநிதிகளைத் தெரிவு செய்வதற்கானதே, தேர்தல்கள் என்ற தோரணையிலேயே, தொடர்ந்தும் இயங்கி வருகின்றன. சரியான அளவில், சமூகங்களுக்கு இடையிலான அதிகார பகிர்வினைச் செய்வதற்கு தயங்கி அல்லது அவ்வாறான தேவையொன்று தொடர்பில் ஒருபோதும் கண்டுகொள்ளாமல், நடந்துவிட்டு, வாக்குகளைக் கோருவது என்பது அபத்தமானது. தமிழ்த் தேசியக் கட்சிகள் நடந்து முடிந்த தேர்தலுக்கான வேட்பாளர்களாக மேலாதிக்க சமூகம் தவிர்ந்து எத்தனை வெற்றி வேட்பாளர்களை அடக்கப்பட்ட சமூகங்களுக்குள் இருந்து முன்னிறுத்தியது என்ற கேள்வியை தவிர்த்துவிட்டு தமிழ்த் தேசியம் சார் உரையாடல்களை யார் திறந்தாலும், அது பொய்களின் மீது போலியான நம்பிக்கைகளைக் கட்டுவதாகும். எந்தவொரு தமிழ்க் கட்சியும் அடக்கி ஒடுக்கப்பட்ட சமூகங்களின் இருந்து வேட்பாளர்களை நிறுத்தியமை என்பது ஒப்புக்கானது. அவர்களினால் ஒருபோதும் வெற்றிபெற முடியாது என்று தெரிந்தே, அவர்களை வேட்பாளர்களாக முன்னிறுத்தினார்கள். அப்படியான நிலை கடந்த பதினைந்து ஆண்டுகளாக தொடர்ந்து வரும் போது, அடக்கி ஒடுக்கப்பட்ட சமூக மக்கள், தமிழ்த் தேசியம் பேசி வரும் போலியாளர்களை புறக்கணிப்பது என்பது இலகுவாக நடைபெறும். அது, 2020 பொதுத் தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வாக்கிழப்பிலும் அங்கஜனின் வாக்குத் திரட்சியிலும் பலமாக வெளிப்பட்டது. இன்று அந்தச் சூழலை, தேசிய மக்கள் சக்தி மிக இலகுவாக அறுவடை செய்திருக்கின்றது.

தமிழ்த் தேசியக் கட்சிகள், குறிப்பாக தமிழரசுக் கட்சியும் அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸும் யாழ் மையவாத நிலைப்பாட்டுக்குள் நின்று உழலும் கட்சிகள். இவற்றுக்கு யாழ்., நல்லூர் மேலாதிக்க சிந்தனைக்கு அப்பாலான சமூகக் கண்ணோட்டம் என்பது பெரும்பாலும் இல்லை. தமிழ்த் தேசியம் என்பது, வெளிப்படையாக உடைத்துப் பேசினால் 'வெள்ளாள தேசியம்' அல்ல. ஆனால், தமிழரசுக் கட்சியும், காங்கிரஸும் அந்த நிலைப்பாட்டில் தான் இன்றுவரை நிற்கின்றன.



அந்த நிலைப்பாட்டினை மாற்றாது, போலி ஒருங்கிணைப்புக் கோரிக்கைகளின் வழியாக தோல்விகளைக் கடக்கலாம் என்பது ஒரு சில தேர்தல்களுக்கு வெற்றிகளை தக்க வைக்க உதவலாம். ஆனால், மறுபுறத்தில் நாடு முழுவதும் ஓரணியாக திரண்டு நல்லிணக்க முகமூடியோடு வந்திருக்கும் தேசிய மக்கள் சக்திக்கு முன்னால் நிலைத்து நீடித்திருக்க முடியுமா என்கிற கேள்வி பிரதானமானது. மாத்தறையில் சரோஜா போல்ராஜும், திருகோணமலையில் அருண் ஹேமச்சந்திராவும் பெரும்பான்மை சிங்கள வாக்குகளினால் தெரிவு செய்யப்பட்ட தமிழ்ப் பிரதிநிதிகள். இவர்களை உதாரணமாகக் காட்டிக் கொண்டு வடக்குக் கிழக்கில்

தொடர்ச்சி ▼

# தமிழ்த் தேசியக் கட்சிகளின் முகத்தில் பாய்ந்த 'தோல்வி' அம்புகள்!

தொடர்ச்சி▲

தங்களை இனங்களையும் இனவாதத்தையும் கடந்தவர்கள் என்ற பரப்புரையை தேசிய மக்கள் சக்தி தொடர்ந்தும் முன்னெடுக்கும். அதுபோல, மட்டக்களப்பில் அந்தக் கட்சிக்கு கிடைத்த வாக்குகளின் சமூகப் பின்னணியை ஆராய்ந்து அறிந்து கொள்ளுங்கள். தொடர்ச்சியாக புறக்கணிக்கப்பட்டு வந்திருக்கின்ற சமூகங்களுக்குள் இருந்து, மக்கள் பிரதிநிதிகளை தேர்வு செய்ய முடியும் என்கிற செய்தியைச் சொல்லுவதற்கான அடையாளமாக அங்கு பெறப்பட்ட வாக்குகள் தமிழர் தேசமெங்கும் செய்தியாகக் கொண்டு செல்லப்படும். ஏனெனில், அது



புறக்கணிக்கப்படும் சமூகங்களின் கனதியான வாக்கு வங்கியை ஒன்றாக திரட்டுவதற்கும் உதவும். இவ்வாறான நிலை மலையக தமிழ் மக்களிடத்திலும் பெருமளவில் வெற்றிக்கான கருவியாக, இந்தத் தேர்தலில் தேசிய மக்கள் சக்தியினால் பயன்படுத்தப்பட்டது. அது, எதிர்பார்த்த அளவினைத் தாண்டிய வெற்றியையும் பெற்றுக் கொடுத்திருக்கிறது. பரம்பரை பண்ணையார்த்தன அரசியலைச் செய்து வந்திருக்கின்ற இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸுக்கு எதிராக தொண்ணூறுகளில் புதிய புரட்சியாளர்களாக வந்த சந்திரசேகரன் தலைமையிலான மலையக மக்கள் முன்னணியும் அதன் பின்னராக வந்த ஏனைய கட்சிகளும் ஒரு கட்டத்தில், பழைய பண்ணையார் கட்சிகளின் தொடர்ச்சிதான் தாங்களும் என்ற தோரணையைக் காட்ட ஆரம்பித்தன. அவ்வாறான தருணத்தில், தேசிய மக்கள் சக்தி, லயன்களுக்குள் இருந்து மலையக ஆளுமைகளை, குறிப்பாக இளம் பெண்களை முன்னிறுத்தி கனதியான வெற்றியை மலையக மக்களுக்கு இடையில் பெற்றிருக்கின்றது. பதுளையில் அம்பிகா சாமுவேலின் வெற்றி, அப்படியான ஒன்றுதான்.

முள்ளிவாய்க்கால் முடிவின் பின்னரான தமிழ்த் தேசிய அரசியல் என்பது 'ராஜபக்ஷக்கள் எதிர்ப்பு' என்ற ஒற்றைப் புள்ளிக்குள் சுருங்கிவிட்டது. அதனை இந்தப் பத்தியாளர் ஏற்கனவே சுட்டிக் காட்டியிருக்கிறார். அப்படியான சூழலில், அரங்கில் இருந்து ராஜபக்ஷக்கள் அகற்றப்பட்ட பின்னணியில், யாரை அரசியல் எதிரி என்று கட்டமைப்பது என்பது தொடர்பில் தமிழ்த் தேசியக் கட்சிகளுக்கு தொடர்ச்சியான சிக்கல் இருந்தது. "... ராஜபக்ஷக்களை சர்வதேச நீதிமன்றத்தில் நிறுத்துவோம், மின்சாரக் கதிரையில் இருத்துவோம்..." என்பதுதான் தமிழரசு, காங்கிரஸ் உள்ளிட்ட கட்சிகளின் பிரசாரக் கோசமாக இருந்திருக்கின்றன. ஆனால், அதற்கான வாய்ப்புகள், வழிகள் தொடர்பில் தமிழ்த் தேசியக் கட்சிகள் ஒருபோதும் செயற்பாட்டு அளவின் முன்னின்று ஆக்கபூர்வமான அடைவுகளை காட்டியன அல்ல. தென்னிலங்கை மக்களே, ராஜபக்ஷக்களைப் புறந்தள்ளியிருக்கின்ற சூழலில், ராஜபக்ஷக்களை மையப்படுத்திய எதிர்ப்புப் பிரசாரம், தமிழர் தேசத்தில் எடுபடும் என்று கொள்ள வேண்டியதில்லை. அது, நடந்து முடிந்த தேர்தலில் எடுபடவும் இல்லை. தமிழரசுக் கட்சியும் காங்கிரஸும் யாழ்ப்பாணத்துக்குள் ஒருவரை ஒருவர் தரம் தாழ்த்தி பேசிக் கொண்டிருக்க, மற்றப் பக்கத்தினால் தேசிய மக்கள் சக்தி, உள்ளூற ஊடுருவி மக்களின் நம்பிக்கையைப் பெற்றிருக்கின்றது. கடந்த 2020 பொதுத் தேர்தலில் எண்ணூற்றுச் சில்லறை வாக்குகளைப் பெற்றவர்கள், இந்தப் பொதுத் தேர்தலில் எண்பதாயிரம் வாக்குகளை யாழ்ப்பாணத்தில் பெற்றிருக்கின்றமை என்பது, 'அநுர' என்கிற ஓர் அலையினால் நிகழ்ந்தது மாத்திரமல்ல. அது, தமிழ்த் தேசியக் கட்சிகளின் மீதான பெரும் அதிருப்தியினாலும் உருவானது.

அத்தோடு, தேசியமக்கள்சக்தியை நோக்கிய தமிழ் மக்களின் திரட்சியின் பின்னால் உணர்த்தப்படும் இன்னொரு செய்தி, தங்களுக்கு 'முகவர்கள்' தேவையில்லை என்பதாகும். ராஜபக்ஷக்கள், ரணில்களைக் கையாளத்தான் வடக்குக் கிழக்கில் டக்ளஸ், அங்கஜன், பிள்ளையான் போன்ற அரச முகவர்கள் தேவை. ஆனால், ராஜபக்ஷக்களும் ரணிலும் அகற்றப்பட்ட பின்னர், அவர்களின் முகவர்களையும் புறக்கணிக்கும் முடிவுக்கு தமிழ் மக்கள் வந்துவிட்டார்கள். இன்றைக்கு அவர்கள், முகவர்கள் இல்லாமல், நேரடிப் பிரதிநிதிகளை வடக்குக் கிழக்குப் பூராவும் தேர்ந்தெடுத்திருக்கிறார்கள். யாழ்ப்பாணத்திலும், வன்னியிலும், திருகோணமலையிலும், மட்டக்களப்பிலும் தேசிய மக்கள் சக்தியின் சார்பில் நேரடி தமிழ்ப் பிரதிநிதிகள் வென்றிருக்கிறார்கள். அவர்களை நேரடியாக அணுகமுடியும் என்ற சூழலை அந்தக் கட்சி வைத்துக் கொண்டிருக்கின்றது. அதனால், ஆட்சியிலும் அதிகாரத்திலும் முகவர்களுக்கு இடமில்லை என்றாகிவிட்டது. அந்தச் சூழலும் சேர்ந்து, இன்னமும் தமிழ்த் தேசியக் கட்சிகளில் இரட்டை மனநிலையோடு தொங்கிக் கொண்டிருக்கும் இன்னொரு கனதியான கூட்டத்தை தேசிய மக்கள் சக்தியின் பக்கத்துக்கு கொண்டு சேர்ந்துவிடும். அடுத்து உள்ளூராட்சி மன்றத் தேர்தல் மற்றும் மாகாண சபைத் தேர்தல்கள் வரவிருக்கின்றன. அப்படியான சூழலில் அரசியல் அதிகாரக் கனவோடு இருக்கும் இளைஞர்களை, தேசிய மக்கள் சக்தி ஈர்த்துக் கொள்வது என்பது இன்னும் இலகுவானது. ஏனெ

தொடர்ச்சி▼

# தமிழ்த் தேசியக் கட்சிகளின் முகத்தில் பாய்ந்த 'தோல்வி' அம்புகள்!

தொடர்ச்சி▲

னில், இன்றைக்குவடக்குக்கிழக்கில் தேசிய மக்கள் சக்தியின் சார்பில் வெற்றி பெற்றிருக்கின்றவர்களி னால் , தமிழ்த் தேசியக் கட்சிகளில் போட்டியிட்டிருந்தால், ஒருபோதும் வெற்றிபெற்றிருக்க முடியாது. அவர்கள், அந்தக் கட்சிகளின் உதிரி வேட்பாளர்களாக மாத்தி ரமே கணிக்கப்பட்டிருப்பார்கள். ஆனால், இன்றைக்கு அவர்கள் தேசிய மக்கள் சக்தியின் வெற்றி பெற்ற வேட்பாளர்கள். அதுபோல, தேர்லொன்றை எதிர்கொள்வதற் கான செலவு என்பது மலையளவு போன்றது. அவ்வாறான நெருக் கடியுள்ள சூழலில்,தமிழ்த் தேசியக் கட்சிகளில் நிலைத்திருப்பதைக் காட்டிலும் தேசிய மக்கள் சக்தி போன்ற நிறுவனக் கட்டமைப்பு உறுதியான இடத்தில் சேர்ந்தால், அவர்களே தங்களை வெற்றி பெற வைப்பார்கள் என்கிற எதிர் பார்ப்பும், அவர்களை நோக்கிய இளைஞர்களின் திரட்சிக்கு வழி வகுக்கும். அவசரமாக மாகாண சபைத் தேர்தல்கள் நடத்தப்பட்டால், வடக்குக் கிழக்கில், தேசிய மக்கள் சக்தி இலகுவாக ஆட்சி அமைக்கும் சூழலுள்ளது.

தமிழ்த் தேசிய அரசியலை பேசும் சில தரப்புக்கள், 'சோறா? சுதந்திரமா...?'என்றதமிழ்மக்களை நோக்கிய ஏளனமான கேள்வியை பெரிய தார்மீகக் கோட்பாட்டுக் கேள்வி மாதிரி தொடர்ச்சியாக எழுப்பிவந்திருக்கின்றன. டக்ளஸுக் கும் பிள்ளையானுக்கும் கடந்த காலங்களில் வாக்களித்து வந்திருக் கின்ற மக்களை நோக்கி, இந்த ஏளனமான வாதத்தை முன்வைத்து கேவலப்படுத்தி வந்திருக்கின்றன. ஆனால், தொடர்ச்சியாக மூன்று தசாப்த கால போருக்குள் சிக்கி பொருளாதார பின்னடைவுகளை சந்தித்திருக்கின்ற சமூகத்துக்குள் சோற்றுப் பிரச்சினை என்பது, பிர தான பிரச்சினை. பசியை அடக்கா மல் எல்லோரையும் தியாகி திலீ பன் மாதிரி சுதந்திர தாகத்தோடு இருக்கக் கோருவது அரசியல் அல்ல் அறமல்ல. அது, அதிகார, பணத் திமிரின் போக்கில் வருவது. உயிரின நிலைத்திருப்பு என்பது பசியை அடிப்படையாகக் கொண் டது. வயிற்றுப் பசி, உடல்பசி, அதிகாரப் பசி என்று அது விரிந்து செல்லும். முதலில் அடங்க வேண்டி யது வயிற்றுப் பசி. அதனைச் செய்வதற்கான எந்தத் திட்டங்களை யும் தமிழ்த் தேசியக் கட்சிகள் கடந்த 15 ஆண்டுகளில் செய்ய வில்லை. அனைத்தையும் யாழ் மேலாதிக்கவாதிகளும், அதன் வால்கள்போல இயங்கும் புலம் பெயர் தரப்புக்களும் 'தமிழ்த் தேசி யம்' என்ற ஒற்றை வார்தைக்குள் நின்று புறக்கணித்திருக்கின்றன. இன்றைக்கு, அதனையே கேள்விக் குள்ளாக்கும் வண்ணம், வடக்கில் தேசிய மக்கள் சக்தி வெற்றிகளைப் பெற்றிருக்கின்றது. இந்தத் தேர்தல் முடிவுகளைக் காட்டி, தமிழ் மக்க ளுக்கு இருப்பது அரசியல் அதி காரப் பிரச்சினை அல்ல, பொருளா தாரப் பிரச்சினை என்று தென் இலங்கை பேசத் தொடங்கிவிட் டது. தேசிய மக்கள் சக்தியின் வெற்றிகளை வழங்கவில்லை. இன்றைக்கு தமிழரசுக் கட்சி வடக்குக் கிழக்கில் வெற்றிருக் கின்ற வெற்றிக்கும், கூட்டமைப்பாக கடந்த முறை பெற்ற வெற்றிருக்கும் இடையில் பெரிய வித்தியாச மில்லை. அது மக்களுக்கும் நன்றா கத் தெரியும். ஆக்கபூர்வமான செயற்பாட்டுத் திட்டங்கள் இன்றி, ஒருங்கிணைவுக் கோசமோ, திரட் சிக் கோசமோ எழுப்பவது, ஒரு கட்டத்தில் மருத்துவர் அர்ச்சுனா போன்றவர்களை நாடாளுமன்றத் துக்கு அனுப்பும் அளவுக்கான நம்பிக்கைச் சிதறல்களைச் செய்யும். பொதுச் சமூக ஒழுங்கில் கலகக்காரனாக, தூசணங்களின்



மூளையான ரில்வின் சில்வா போன்ற வர்கள், அதனை தொடர்ச்சியாக தேர்தல் மேடைகளில் பேசியும் வந்திருக்கிறார்கள். அப்படியான சூழலில், அதன் பிரதிபலிப்பை தமிழ் மக்கள் காட்டிவிட்டார்கள் என்பது உணரப்படும். தமிழ்த் தேசியம் என்பது, விடுதலைக் கோசம் மாத்திரமல்ல. நிலத்தை யும், பொருளாதாரத்தையும், அதிகாரத்தையும் ஆக்கிரமிப்பு அடக்குமுறைச் சக்திகளிடம் இருந்து காப்பது. அதனை முழுமை யாக உணர்ந்து செயலாற்றாமல், சோறா சுதந்திரமாக என்று கேட்ப தெல்லாம், திரும்பத் திரும்ப பொய்களின் மீது நம்பிக்கையைக் கட்டுவதாகும்

தமிழ்த் தேசியக் கட்சிகள் எல்லா மும் ஒன்றாக திரண்டால் போதும், வடக்குக் கிழக்கில் தமிழ்த் தேசிய அரசியலை மீண்டும் நிலைநிறுத்தி விடலாம் என்பது தொடர்வாதம். ஆனால், அந்த ஒருங்கிணைவு 2020 பொதுத் தேர்தலில் பெரிய வழி குழப்படிக்காரனாக ஓர் ஒழுங்கு முறைக்குள் என்றைக்கும் வராத மருத்துவர் அர்ச்சுனா, தன்னை தமிழ்த் தேசியவாதியாக முன்னி றுத்துகிறார். அதிலும், இந்தத் தேர்தலில் வெற்றிபெற்ற கஜேந் திரகுமாரையும், தோல்வியுற்ற சுமந்திரனையும்விட தன்னை மக்கள் அமோக விருப்பு வாக்குகள் வழங்கி அங்கீகரித்திருக்கிறார்கள் என்ற அறிவிப்பை விடுத்திருக்கி றார். இந்த அறிவிப்பு, போலித் திரட்சி, ஒருங்கிணைவுக் கோசத்தை எழுப்புவர்களின் முகத்தில் வீசப் பட்ட அம்பு. அதனை, தமிழரசு, காங் கிரஸ் உள்ளிட்ட தமிழ்த் தேசியக் கட்சிகள் முதலில் பிடுங்கி எடுத்து சரியான மருந்திட்டு காயத்தை ஆற்றிவிட்டு, தேசத் திரட்சி பற்றி பேசுவது நல்லது. இல்லையென் றால், இன்னும் இன்னும் மோசமான பின்விளைவுகளைச் சந்திக்க வேண்டி வரும்.

# அடுத்த ஐந்து வருடங்களும் எனது சேவை எப்படி அமையும் என்பதைப் பார்ப்பீர்கள்!

## எம்.பி. பதவிக்கான தெரிவின் பின் சத்தியலிங்கம் தெரிவிப்பு



(கி.வசந்தன்)

அடுத்து வரும் 5 வருடங்களும் எப்படிச் செயற்படுகின்றேன் என்பதைப் பார்ப்பீர்கள் என நாடாளுமன்ற உறுப்பினர் ப.சத்தியலிங்கம் தெரிவித்தார்.

தமிழரசுக் கட்சியின் தேசியபட்டியல் ஆசனம் தமக்கு வழங்கப்பட்ட பின்னர் ஊடகங்களுக்குக் கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார். தொடர்ந்து கருத்து தெரிவித்த அவர் –

பாரிய பொறுப்பு என்மீது சுமத்தப்பட்டுள்ளது. மாகாணசபை உறுப்பினராக இருந்த போது பல அபிவிருத்தி திட்டங்களை செய்திருந்தேன். இருந்த போதும் மக்கள் என்னை நிராகரித்தனர். அதற்கு பல காரணங்கள் உள்ளன.

எனக்கு எதிரான போலிப் பிரச்சாரங்களை எதிர்க் கட்சிகளும் போட்டியாளர்களும் முன்வைத்திருந்தனர். அது தோல்விக்கு ஒரு காரணமாக இருந்தது. எனது தொழில் அரசியல் அல்ல. நான் ஒரு வைத்தியர். கட்சி இந்த பதவியை தராவிட்டால் மீண்டும் ஒரு அரச உத்தியோகத்தராக செயற்படும் எண்ணத்தில் இருந்தேன்.

வன்னி மாவட்டமானது திட்டமிட்ட இன அழிப்பு இடம்பெறுகின்ற ஒரு பிரதேசம். எனவே அதை உணர்ந்து செயற்படக் கூடிய ஒரு நாடாளுமன்ற உறுப்பினரின் தேவையை அறிந்து கட்சி இந்த ஆசனத்தை வழங்கியுள்ளது.

என் மீது கட்சி வைத்த நம்பிக்கையைஏற்றுஇந்தபகுதிமக்களுக்குமுழுமையான எனது சேவையை அர்ப்பணிப்போடு செய்வேன். அந்தவகையில் வாக்களித்த மற்றும் வாக்களிக்காத மக்களுக்கும் நன்றிகள். கட்சிக்கும் நன்றிகள்.

இனிவரும் ஐந்து வருடங்களில் சத்தியலிங்கம் எப்படி செயற்படுவார் என்பதை அனைவரும் நிச்சயமாக பார்ப்பீர்கள். கட்சியின் பொதுச் செயலாளர் பதவியிலும் தொடருவேன். அது பொதுச்சபையில் தீர்மானிக்கப்படக்கூடிய ஒரு விடயம். அதனை விடுவதற்கான சந்தர்ப்பம் இன்னும் ஏற்படவில்லை. – என்றார்

# பெரியமடு கொமான்டோ இராணுவப் பயிற்சி முகாமில் 500க்கும் அதிக வீரர்கள் தனிமைப்படுத்தப்பட்டனர்!

## மூளைக் காய்ச்சல் தொற்றுப் பரவல் என்று அச்சம்

(மன்னார் நிருபர்)

மன்னார் – யாழ் பிரதான வீதி பெரியமடு கொமான்டோ இராணுவப் பயிற்சி முகாமில் 500 இற்கும் மேற்பட்ட இராணுவ வீரர்கள் தனிமை படுத்தப்பட்டுள்ளனர் எனத் தெரிய வருகிறது.

இந்த முகாமில் பயிற்சி நடவடிக்கையில் ஈடுபட்ட இராணுவ வீரர்கள் சிலருக்கு சுகயீனம் ஏற்பட்ட நிலையில் அவர்கள் மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர்.

இதன் போது இவர்களுக்கு முன்னெடுக்கப்பட்ட மருத்துவ பரிசோதனையின் போது அவர்கள் மூளைக் காய்ச்சல் ஏற்பட்டமை கண்டறியப்பட்டது.

இதை மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலையின் வைத்திய அத்தியட்சகர் வைத்தியர் அஸாத் எம் ஹனீபா உறுதி படுத்தினார்.

இந்த நிலையில் பயிற்சி முகாமில் பயிற்சி நடவடிக்கைகளை நிறுத்த வைத்திய தரப்பினால் கோரிக்கை முன் வைக்கப்பட்டது. அங்கு பயிற்சி நடவடிக்கைகள் நிறுத்தப்பட்டு அங்கிருந்த 500 இற்கும் மேற்பட்ட இராணுவ வீரர்கள் தனிமைப் படுத்தப் பட்டுள்ளனர் எனவும் தெரிய வருகிறது.





# ஹாட்லியின் மைந்தர்களது 25 ஆம் ஆண்டு நினைவேந்தல் உணர்வுபூர்வமாக இன்பர்சிட்டி கடற்கரையில் அனுஷ்டிப்பு



ஹாட்லியின் மைந்தர்களது 25 ஆம் ஆண்டு நினைவு நாள் வடமராட்சி இன்பர்சிட்டி கடற்கரையில் அவர்களது குடும்பத்தவர் மற்றும் நண்பர்களால் நேற்று ஞாயிற்றுக்கிழமை உணர்வு பூர்வமாக அனுஷ்டிக்கப்பட்டது.

கல்வி செயற்பாட்டின் நிமித்தம் வடமராட்சி இன்பர்சிட்டி கடற் பகுதியில் 1999 ஆம் ஆண்டு நவம்பர் 17 ஆம் திகதி, கடல்வள ஆராய்சியிக் ஈடுபட்டிருந்தவேளை கடல் அலையில் சிக்குண்டு உயிரிழந்திருந்த யாழ்.ஹாட்லி கல்லூரியின் 2000 ஆம் ஆண்டு உயர்தர வகுப்பு மாணவர்களான பூரணமூர்த்தி கந்தர்வன், சிவநாதன் இரவிசங்கர், சுந்தரலிங்கம் சிவோத்தமன் மற்றும் பாலகிருஷ்ணன் பிரதீபன் ஆகிய நான்கு பேரின் 25 ஆவது ஆண்டு நினைவேந்தல் மற்றும் பேராதனை பல்கலைக் கழகத்தில் பொறியியல் பீட மாணவனாக கல்வி கற்றுவந்த வேளை ரயில் விபத்தில் சிக்கி உயிரிழந்த மரியரட்ணம் குணரட்ணத்தின் 20 ஆவது ஆண்டு நினைவேந்தல் நிகழ்வுகள் நேற்று வடமராட்சி இன்பர்சிட்டி கடற்கரையில் அனுஷ்டிக்கப்பட்டது.

இன்பர்சிட்டி வெள்ளை வான் கடற்கரைக்கு அண்மித்த பகுதியில் உயிரிழந்த மாணவர்களது திருவுருவப் படம் வைக்கப்பட்டு அவர்களுக்கு விருப்பமான உணவுகள், சிற்றுண்டி வகைகள் படையலிடப்பட்டு, மாலை அணிவிக்கப்பட்டு, மலர்தூவி உணர்வு பூர்வமான முறையில் அஞ்சலி செலுத்தப்பட்டது.

இதன்போது உயிரிழந்த மாணவர்களது குடும்பத்தினர், உறவினர்கள், நண்பர்கள் மற்றும் ஹாட்லிக் கல்லூரி அதிபர் த.கலைச்செல்வன் உள்ளிட்ட பலர் பங்கேற்று அஞ்சலி செலுத்தினர்.

இதனைத் தொடர்ந்து ஹாட்லிக் கல்லூரி மண்டபத்தில் இன்று காலை 9 மணி முதல் மதியம் 2 மணி வரை ஹாட்லியின் மைந்தர்கள் நினைவாக குருதிக்கொடை முகாம் இடம்பெற உள்ளது.

# தமிழர்கள் புறக்கணிக்கப்படுகின்றார்கள் என ஜெனிவாவில் இனி கேள்வியெழுப்ப முடியாது!

## சட்டத்தரணி பிரதீபா மஹானாம கூறுகின்றார்

வடக்கு மற்றும் கிழக்கு மக்கள் ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்க தலைமையிலான அரசாங்கத்துக்கு முழுமையான ஒத்துழைப்பு வழங்கியுள்ளார்கள். அரசியல் கட்டமைப்பில் இருந்து தமிழர்கள் புறக்கணிக்கப்படுகிறார்கள் என்று ஜெனிவாவில் இனிக் கேள்வியெழுப்ப முடியாது.

பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் தடுத்து வைக்கப்பட்டுள்ள அரசியல் கைதிகளுக்கு ஜனாதிபதி பொது மன்னிப்பு வழங்க வேண்டும் என சட்டத்தரணி பிரதீபா மஹானாம தெரிவித்தார்.

கொழும்பில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போது அவர் மேற் கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்தவை வெளமாறு:–

பொதுத்தேர்தலில் ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்க தலைமையிலான தேசிய மக்கள் சக்தி 21 தேர்தல் மாவட்டங்களிலும் அமோக வெற்றிப் பெற்றுள்ளமை விசேட அம்சமாகும்.

வடக்கு மற்றும் கிழக்கு மாகாண தமிழ் மக்கள் பாரம்பரியமான அரசியல் கலாச்சாரத்தில் இருந்து விலகி புதிய அரசியல் கலாச்சாரத்துக்குள் பிரவேசித்துள்ளார்கள்.

வடக்கு மற்றும் கிழக்கு மாகாண மக்கள் – குறிப்பாக தமிழ் மக்கள் – ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்க தலைமையிலான தேசிய மக்கள்



சக்திக்கு முழுமையான ஒத்துழைப்பு வழங்கியுள்ளார்கள்.

எவ்விதமான அரசியல் கூட்டணியுமில்லாமல் தேசிய மக்கள் சக்தி வெற்றிப் பெற்றுள்ளமை விசேட அம்சமாகும்.

வடக்கு மற்றும் கிழக்கு மாகாண மக்கள் பொது அரசியல் கட்டமைப்பில் இருந்து புறக்கணிக்கப்பட்டுள்ளனர் என்றே கடந்த காலங்களில் சர்வதேச மட்டத்திலும், சர்வதேச மனித உரிமைகள் ஆணைக்குழுவிலும் தொடர்ச்சியாகக் குறிப்பிட்டது.

இந்த விடயங்களை முன்னிலைப் படுத்தி இலங்கைக்கு எதிரான பிரேரணைகளும் முன்வைக்கப்பட்டன.

ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்க தலைமையிலான அரசாங்கத்துக்கு வடக்கு மற்றும் கிழக்கு மாகாண மக்கள் குறிப்பாக தமிழ் மக்கள் முழுமையான ஒத்துழைப்பு வழங்கியுள்ளார்கள்.

ஆகவே பொது அரசியல் கட்டமைப்பில் இருந்து தமிழர்கள் புறக்கணிக்கப்பட்டுள்ளார்கள் என்று இனி ஜெனிவாவில் குற்றச்சாட்டுக்களை முன்வைக்க முடியாது.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணைக்குழுவின் கூட்டத்தொடர் 2025 பெப்ரவரி மாதம் நடைபெறவுள்ளது.

தமிழ் மக்கள் புதிய அரசியல் கட்டமைப்புக்குள் பிரவேசித்துள்ளார்கள், பழைய பாரம்பரியமான அரசியல் கட்டமைப்பை புறக்கணித்துள்ளார்கள் என்ற செய்தியை அரசாங்கம் சர்வதேச அரங்கில் எடுத்துரைக்க வேண்டும்.

வடக்கு மற்றும் கிழக்கு மாகாண மக்கள் எவ்விதமான எதிர்பார்ப்பு மற்றும் நிபந்தனைகளின்றி ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்கவுக்கு ஆதரவளித்துள்ளார்கள்.

ஆகவே தமிழர்களின் அடிப்படைப் பிரச்சினைகளுக்கு தீர்வு காண்பதற்கு ஜனாதிபதி நாட்டின் சட்ட கட்டமைப்புக்குள் இருந்துக் கொண்டு தீர்மானங்களை எடுக்க வேண்டும்.

பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் பல ஆண்டுகாலமாக சிறையில் தடுத்து வைக்கப்பட்டுள்ளஅரசியல்கைதிகளுக்கு ஜனாதிபதி பொது மன்னிப்பு வழங்க வேண்டும்.

அத்துடன் நாட்டில் மனித உரிமையை மென்மேலும் வலுப்படுத்த நாடாளுமன்ற பொறிமுறைக்குள் விசேட செயற்திட்டங்களை வகுக்க வேண்டும். – என்றார்.

# இன்றைய ராசி பலன்கள் - 18.11.2024




இன்று உங்களுக்கு சாதகமான நாள். நீங்கள் நம்பிக்கை உணர்வுடன் வெற்றியைக் கொண்டாடி மகிழ்வீர்கள். உங்கள் இனிமையான வார்த்தைகள் மூலம் பிறரை வெல்வீர்கள். இன்று முக்கிய முடிவுகள் எடுக்க உகந்த நாள்.

கடினமான பணிகளையும் எளிதில் முடிப்பீர்கள். பணியில் உங்கள் செயல்திறனுக்கு அங்கீகாரமும் பாராட்டும் பெறுவீர்கள்.

உங்கள் துணையுடன் இனிமையான தருணங்களை பகிர்ந்து மகிழ்வீர்கள். உங்கள் இனிமையான வார்த்தைகள் உங்கள் துணையை மகிழ்விக்கும். இதனால் இருவருக்கிடையிலான உறவில் நல்ல பிணைப்பு ஏற்படும்.

பணப்புழக்கம் தாராளமாக காணப்படும். உங்கள் வங்கியிருப்பு உயரக் காண்பீர்கள்.

இன்று சிறந்த ஆற்றலுடன் காணபடுவீர்கள்.




இன்று நீங்கள் நம்பிக்கையான மன நிலை கொண்டிருப்பீர்கள். நீங்கள் உறுதியுடன் இருப்பதன் மூலம் இன்றைய நாளின் சவால்களை வெற்றி கொள்ள முடியும்.

இன்று இறுக்கமான பணிகளில் மும்மரமாக இருப்பீர்கள். பணியின்போது தவறுகள் ஏற்பட வாய்ப்புள்ளது, இது உங்களுக்கு கவலையை அளிக்கும்.

உறவில் நல்லிணக்கம் பராமரிக்க வாக்கு வாதங்களை தவிர்க்கவும்.அமைதியான சகஜமான அணுகுமுறை மூலம் இனிமையற்ற தருணங்களை தவிர்க்கலாம்.

சிறிது பண இழப்பு காணப்படுகின்றது. தேவையற்ற செலவுகளை தவிர்க்க கட்டுப்பாடுடன் செலவு செய்ய வேண்டும்.

வெந்நீர் குடிப்பதன் மூலம் சளியை தவிர்க்க இயலும். குளிர்ச்சியான உணவுகளை தவிர்க்க முயலுங்கள்.




இன்று உங்களின் பொறுமை சோதனைக்குள்ளாகும் சூழ்நிலை ஏற்படும். நீங்கள் எளிதில் உணர்ச்சி வசப்படுவீர்கள். நீங்கள் அமைதியான அணுகுமுறை மேற்கொள்ள வேண்டும். உங்கள் இலக்குகளை அடைய கடினமாக போராட வேண்டும்.

பணியிடத்தில் பதட்டமான சூழ்நிலை காணப்படும். பணியிடச் சூழலில் காணப்படும் பதட்டமான் நிலைமை உங்களுக்கு கவலையை ஏற்படுத்தும்.

உங்கள் துணையிடம் உணரச்சிவசப்படுவீர்கள். இதனால் இருவருக்கிடையேயான உறவு பாதிக்கும். நல்ல புரிந்துணர்விற்கு சகஜமான அணுகுமுறை மேற்கொள்வது நல்லது.

பயணத்தின் போது பண இழப்பு காணப்படுகின்றது. பணத்தை கையாளும்போது கவனம் தேவை.




இது உங்களுக்கு சாதகமான நாள். நற்பலன்கள் கிடைக்கும் நாள். உங்கள் தொடர் முயற்சியால் இது சாத்தியம்.

வேலை தொடர்பான பயணம் காணப்படுகின்றது. இது உங்களுக்கு நன்மை பெற்றுத் தரும். வெற்றி கிடைக்கும்.

உங்கள் துணையுடன் சிறந்த உணர்வுகளை பகிர்ந்து கொள்வீர்கள். இன்றைய நாளை உங்கள் துணையுடன் நெருங்கிப் பழகி கழிப்பீர்கள்.

இன்று அதிர்ஷ்டகரமான நாள். இன்று அதிக பண வரவு காணலாம். அந்தப் பணத்தை நீங்கள் ஆன்மீக நோக்கத்திற்கு பயன்படுத்தலாம்.

இன்று உங்கள் மன உறுதி காரணமாக ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.




இன்று பரிசோதனைகுள்ளாகும் நாள். ஆன்மீக ஈடுபாடு உங்களுக்கு ஆறுதலை அளிக்கும். ஆன்மீக யாத்திரை உங்களுக்கு பயனளிக்கும்.

பணியிடச் சூழலில் அசௌகரியம் காணப்படும். உங்கள் பணிகளை மேற்கொள்ளும்போது கவனமுடன் இருக்க வேண்டும்.

நீங்கள் உங்கள் துணையுடன் கடுமையாக நடந்து கொள்வீர்கள். இது உறவின் நல்லிணக்கத்தை கெடுக்கும். உறவில் மகிழ்ச்சியை தக்க வைக்க அமைதியாக நடந்து கொள்ள வேண்டும்.

நிதிநிலைமை ஏமாற்றம் அளிக்கும் வகையில் இருக்கும். குடும்பத்திற்காக தேவையற்ற விஷயங்களுக்கு செலவு செய்ய நேரலாம்.

சில அசௌகரியங்கள் காரணமாக உங்கள் ஆரோக்கியம் பாதிக்கப்படும். கால் வலி ஏற்பட வாய்ப்புள்ளது.




இன்று வருத்தப்படும்படியான சில சூழ்நிலை காணப்படும். நீங்கள் எதிர்பார்த்த பலன்கள் கிடைக்காது. எளிய அணுகுமுறை மேற்கொள்வதன் மூலம் சாதகமான பலன்கள் கிடைக்கும்.

கூடுதல் பொறுப்புகள் காரணமாக பணிகளை குறித்தநேரத்தில் முடிப்பதை கடினமாக உணர்வீர்கள். விரும்பிய இலக்குகளை அடைவதற்கு திட்டமிட்டு பணியாற்ற வேண்டும்.

குடும்ப பிரச்சினை ஒன்றின் காரணமாக கருத்து வேறுபாடு ஏறபட்டு உங்கள் துணையுடன் சூடான விவாதத்தில் கலந்து கொள்வீர்கள்.இத்தகைய போக்கிற்கு இடம் கொடுக்காமல் இருக்க முயலுங்கள்.

உங்கள் குழந்தையின் ஆரோக்கியத்திற்காக பணம் செலவு செய்ய வேண்டிய கட்டாயம் காணப்படும். இதனால் சேமிப்பதற்கான வாய்ப்பு குறைவாக இருக்கும்.




உங்கள் முயற்சியில் பொறுமையும் உறுதியும் தேவை. உங்கள் முயற்சில் வெற்றி காண உணர்ச்சி வசப்படாமல் இருக்க வேண்டும். உங்கள் பணிகளை திட்டமிட்டு நடத்த வேண்டும்.

இன்று கூடுதல் பணிகள் காணப்படும். சக ஊழியர்களின் கடுமையான நிலைப்பாட்டின் காரணமாக நீங்கள் உணர்ச்சிவசப்பட நேரலாம்.

நீங்கள் குழப்பமான உணர்வுகளை உங்கள் துணையிடம் வெளிப்படுத்துவீர்கள். நீங்கள் இதனை தவிர்த்து அமைதியுடனும் கட்டுப்பாட்டுடனும் இருக்க வேண்டும்.

பணப்புழக்கம் இன்று சுமூகமாக இருக்காது. தேவையற்ற செலவுகள் செய்வீர்கள். இது உங்களுக்கு கவலையை ஏற்படுத்தும்.

இன்று ஆற்றலும் ஆரோக்கியமும் குறைந்து காணப்படும். தொண்டை வலி ஏற்பட வாய்ப்புள்ளது.




சுய வளர்ச்சிக்கான முயற்சிகளுக்கு இன்று சாதகமான நாள். உங்கள் மன உறுதி மூலம் இன்று உங்கள் விருப்பங்களை பூர்த்தி செய்து கொள்வீர்கள். நீங்கள் எடுக்கும் முயற்சிகள் நல்ல பலனளிக்கும்.

பணியில் உங்கள் செயல்திறன் உங்களுக்கு திருப்திகரமாக இருக்கலாம். குறித்த நேரத்தில் பணிகளை முடிப்பதற்கான சாத்தியம் உள்ளது.

உங்கள் துணையுடன் நல்ல புரிந்துணர்வை பராமரிப்பீர்கள். உங்கள் துணையின் விருப்பப்படி நடந்து கொள்ள நேரலாம்.

இன்று பண வரவு அதிகமாக காணப்படும். பணத்தை சிறப்பாக சேமிப்பீர்கள். இதனால் மகிழ்ச்சியாக இருப்பீர்கள்.

உங்களிடம் காணப்படும் சிறந்த ஆற்றல் காரணமாக இன்று உங்கள் ஆரோக்கியம்சிறந்து காணப்படும்.

# இன்றைய ராசி பலன்கள் - 18.11.2024




இன்றைய நிகழ்வுகளில் நீங்கள் நடைமுறை அணுகுமுறையை மேற்கொள்ள வேண்டும். உணர்ச்சி வசப்படுவதை தவிர்க்க வேண்டும். எதிர்மறை எண்ணங்கள் உங்களை பாதிக்காமல் பார்த்துக் கொள்ளுங்கள். இன்று அமைதியாக இருங்கள்.

பணியிடச் சூழல் மகிழ்சிகரமாக இருக்காது. சக பணியாளர்களுடன் மோதல் ஏற்பட வாய்ப்புள்ளதால் நீங்கள் கவனமாக இருக்க வேண்டும்.

உங்கள் துணையுடன் மனம் திறந்து பேசுங்கள். உங்கள் உணர்வுகளை ஒளிவு மறைவு இன்றி வெளிபடுத்துவதன் மூலம் நல்லுறவு வளரும்.

இன்று கூடுதல் செலவுகள் காணப்படும். உங்கள் தேவைகளை பூர்த்தி செய்துகொள்ள நீங்கள் சிறிய அளவில் கடன் வாங்குவீர்கள்.




இன்று அர்த்தமுள்ள நாளாக இருக்காது. உங்கள் முயற்சிகள் வெற்றியை அளிக்காது. நீங்கள் அமைதியாகவும் நட்பான அணுகுமுறையுடனும் இருக்க வேண்டும். ஆன்மீக ஈடுபாடு ஆறுதலை பெற்றுத் தரும்.

பணியிடச் சூழல் சாதகமான பலன்களை அளிக்காது. பணிச்சுமை அதிகமாக காணப்படும்.

உங்களின் கடுமையான போக்கு காரணமாக உங்கள் துணையுடன் மகிழ்ச்சியை தக்க வைத்துக் கொள்வது கடினம். சகஜமான அணுகுமுறையால் நன்மை விளையும்.

இன்று நிதிநிலைமை மகிழ்ச்சிகரமாக இருக்காது. இன்று கூடுதல் செலவுகள் செய்ய நேரலாம்.

பதட்டம் காரணமாக கால் வலி மற்றும் முதுகில் விறைப்பு ஏற்பட வாய்ப்புள்ளது. இசை கேட்பதன் மூலம் ஆறுதல் பெறலாம்.




இன்று சில வலுவற்ற சூழ்நிலை காணப்படும். திட்டமிட்டு முயற்சி செய்தால் நல்ல பலன் கிடைக்கும். பிரார்த்தனை மற்றும் மந்திரங்கள் மூலம் நற்பயன் பெறலாம்.

பணியிடத்தில் நற்பலன்கள் காண உங்கள் பணியில் ஒழுங்கு முறையான அணுகுமுறை வேண்டும்.

குடும்ப பிரச்சினை ஒன்றின் காரணமாக உங்கள் துணையுடன் தவறான புரிந்துணர்வு ஏற்பட வாய்ப்புள்ளது. இது உங்களுக்கு கவலையை ஏற்படுத்தும். உங்கள் துணையுடன் நட்பான அணுகுமுறை மேற்கொள்வது சிறந்தது.

இன்று தேவையற்ற செலவுகள் காணப்படும். இதனால் சிறிது வருத்தம் உங்களிடம் காணப்படும்.

இன்று பதட்டம் காரணமாக தலைவலி ஏற்பட வாய்ப்புள்ளது.




உங்களை மேம்படுத்திக் கொள்ள இன்றைய நாளை நீங்கள் பயன்படுத்திக் கொள்ளலாம். உங்களின் இனிமையான தொடர்பின் மூலம் சாதகமான பலன்கள் சாத்தியம். இன்று உங்களுக்கு சிறப்பான நாள்.

பணியிடத்தில் உங்கள் செயல்திறன் சாதகமான பலன்களை அளிக்கும். பணி சம்பந்தமான பயணம் காணப்படுகின்றது.

உங்கள் துணையுடன் மகிழ்ச்சியான தருணங்களை பகிர்ந்து கொள்வீர்கள். உங்கள் இனிமையான வார்த்தைகளால் உங்கள் துணை மகிழ்ச்சியுறுவார். இதனால் இருவரிடையே நல்ல புரிந்துணர்வு ஏற்படும்.

பணப்புழக்கம் அதிக அளவில் காணப்படும். உங்கள் தேவைகள் சமாளிக்க நீங்கள் சிறிய அளவில் கடன் வாங்குவீர்கள்.




